XV

தைத்ரீயாரண்யகம்

(நான்காவது, ஐந்தாவது ப்ரச்னங்கள்)

ஸ்ரீ அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600004.

2008

[illegible]

TAITTRIYAARANYAKA

XV

தைத்ரீயாரண்யகம்

(நான்காவது, ஐந்தாவது ப்ரச்னங்கள்)

உரையாசிரியர்:
ப்ரம்மஸ்ரீ N. V. நடராஜ தீக்ஷிதர் அவர்கள்,
நங்கவரம், திருச்சி.

ஸ்ரீ அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600004.
2008

இரண்டாம் பதிப்பு : 2008

உரிமை பதிவு பெற்றது.

பிரதிகள் : 100

அட்டவணை

	பக்கங்கள்
முகவுரை	i
நான்காவது ப்ரச்னம்	1
ஐந்தாவது ப்ரச்னம்	49
தைதீரீய சாகா திவாகீர்த்யானி	84
அவாந்தரதீக்ஷை போதாயனர்	86
ப்ரவர்க்ய ப்ரயோகம்	88
யாகசாலை குறிப்பு	93
யாகசாலை படம்	

இலவச வெளியீடு

அச்சிட்டோர்:

சாவித்திரி லேசர் பிரிண்டிங்
37/14, பெரியபள்ளி தெரு,
மந்தைவெளிபாக்கம்,
சென்னை - 600 028.
போன்: 2464 3268

ப்ரவர்க்யம்—முகவுரை

॥ वेदोधर्ममूलम् ॥

தர்மத்திற்கு வேதமே ஆதாரம். தர்மம் என்பது தனக்கு நன்மையையும், மற்றும் மனிதர்களுக்கும், உயிரினங்களுக்கும், பிராணி வர்க்கங்களுக்கும் மற்றும் ஓஷதி வர்க்கங்களுக்கும் கூட இடையூறுகள் செய்யாமல் நன்மை செய்வதும், வேதங்களில் கூறியுள்ள கர்மாக்களை அனுஷ்டிப்பதும் தான் தர்மம் எனப்படுகிறது.

மகரிஷிகளால் கூறப்பட்ட பலவித தர்ம சாஸ்திரங்களுக்கும் பிறப்பிடம் வேதமே ஆகும். யக்ஞங்கள் செய்வதும் சிறந்த தர்மமாகும். (यज्ञोहि श्रेष्ठतमं कर्म) யக்ஞங்களினாலேயே ஆதாரமில்லாமல் அந்தரத்தில் இருக்கும் உலகங்கள் (Universe) நிலைப் பெற்று இருக்கின்றன. यज्ञे सर्वं प्रतिष्ठितं तेनैव ध्रियते जगत्) ஒவ்வொரு அந்தணரும் தன் பிறவிப்பயனை முழுவதும் அடைவதற்கு வேதத்தை அத்யயனம் செய்வதும், அதில் கூறப்பட்டுள்ள யக்ஞாதிகளைக் கடைப்பிடிப்பதுமே சரியான வழியாகும். பரப்ரஹ்மத்தை அடைவதான ப்ரஹ்மஞானம் என்ற உயர்ந்த அறிவுத்திறனை அடைவதற்கு வேதங்களின் கடைசி

பாகமாக இருக்கும் உபநிஷத்துக்களே கருவியாக இருக்கின்றன.

வேதங்களில் சொல்லப்பட்ட யாகங்களைச் செய்வதற்காக ப்ராஹ்மணர்களும், தேவர்களும், நக்ஷத்திரங்களும் சிருஷ்டிக்கப்பட்டன என்றும்; யாகம் நடத்துபவர்களுக்கு, தக்ஷிணை கொடுப்பதற்கு ஸ்வர்ணமும், தேவர்களுக்கு ஹவிஸ் உண்டாக்குவதற்கு பசுக்களும்; வெள்ளி, செம்பு, பித்தளை, முதலிய உலோகங்கள் கும்பம், யக்ஞ பாத்திரங்கள் செய்வதற்கும்; அரசு, புரசு ஆகிய விருக்ஷங்கள் ஸமித்து, யூபங்கள் செய்வதற்கும்; ஆடு மற்றும் காட்டு மிருகங்கள் யக்ஞத்திற்கும், ச்ருஷ்டிக்கப்பட்டன என்று மகாபாரதம் அச்வ மேதிக பர்வத்தில் கூறப்பட்டுள்ளது.

அதுபோலவே பகவத்கீதை, 3-வது அத்யாயம் 14, 15-வது ச்லோகத்தில், யாகம் செய்வதனு லேயே மழை உண்டாகிறது என்றும், மழையின் மூலம் ஜலம் உண்டாகிறது என்றும், உலகத்தில் வசிக்கின்ற மனிதர்களும், மிருகங்களும், தானிய வர்க்கங்களும், தாவர வர்க்கங்களும் மழையின் மூலமே ஜீவித்திருக்கின்றன என்றும் கூறப் பட்டுள்ளது.

अन्नात् भवन्ति भूतानि पर्जन्यात् अन्नसंभवः ।
यज्ञात् भवति पर्जन्यः यज्ञः कर्मसमुद्भवः ॥
कर्म ब्रह्मोद्भवं विद्धि ब्रह्म अक्षर समुद्भवम् ।
तस्मात् सर्वगतं ब्रह्मनित्यं यज्ञे प्रतिष्टितम् ॥

(भ. गी. अ. 3. श्लो. 14; 15.)

ஆகவேதான், உலகத்திற்கு க்ஷேமத்தை அளிக்கக் கூடிய, சக்தி வாய்ந்த யக்ஞங்களை (யாகங்களை) செய்ய வேண்டிய (அனுஷ்டிக்க வேண்டிய) விதி முறைகளையும் பொறுப்புகளையும் ப்ராஹ்மணர்களிடத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு ஆரம்பிக்கப்படும் யாகங்களில், அக்னிஷ்டோமம் என்ற ஸோம யாகத்தை முதலில் செய்ய வேண்டும். ஸோம யாகம் ஆரம்பிக்கும் பொழுது யக்ஞத்தின் சிரஸ், கழுத்து என்று கூறப் படும் 'ப்ரவர்க்யம்', 'உபஸத்' என்ற இரு கர்மாக்களை ப்ரதி தினமும் அனுஷ்டிக்கப்பட வேண்டும்.

தைத்ரீய ஆரண்ய காண்டத்தின் 4, 5வதும், ப்ரச்னங்களாக உள்ள ப்ரவர்க்ய மந்திரங்கள் பூர்வ சாந்தி என்ற வாக் தேவதையின் ப்ரார்த்

தனையுடன் ஆரம்பித்து, பல தேவதைகளைப் பிரார்த்திக்கும் உத்தர சாந்தியுடன் முடிகிறது. இவை விவாஹத்திற்கு முன்பு, மாணவனால் செய்யப்படும் அஷ்டவ்ரதம் என்று கூறப்படுகின்ற வேத அத்யயனத்தின் ஆரம்பம், முடிவு (வ்ரதம்) இவைகளில் உபயோகிக்கப்படுகின்றன. 'பூர்வ சாந்தி, உத்தர சாந்தி' இவைகளுடன் கூடியது ப்ரவர்க்ய ப்ரச்னம் மட்டுமே. ப்ரவர்க்யம் என்பது அவாந்தர தீக்ஷை எனப்படுகிறது. இதனால் யக்ஞங்களுக்கான நியமங்கள் ப்ரவர்க்யம் செய்வதனாலேயே அடையப்படுகின்றன.

அச்விநி தேவர்களுக்கு ஹவிர்பாகம் கொடுப்பதற்கான, பால மகாவீரம் எனும் மண் பானையில் காய்ச்சுவது ப்ரவர்க்யம் எனும் க்ரியையாகும். இம்மந்திரங்களில் எல்லா இடங்களிலும் மகாவீரம், கர்மம் (கர்) ஆதித்யன், இவைகள் சூரியனின் ரூபம் என்று வர்ணிக்கப்படுகிறது. ப்ரவர்க்ய மந்திரங்களில் பல இடங்களில் சூரியனுடைய உருவமான மகாவீரம், யக்ஞம் செய்பவருக்கு புத்ர, தீக்ஷண்யம், காந்தி, தேஜஸ், பலம், ஐச்வர்யம் இவைகளைக் கொடுக்கக் கூடியதும், அதில் காய்ச்சப்படும் பால் தீர்க்காயுளைத் தரவல்ல அமிர்தம் போன்றது என்றும் கூறப்படுகிறது.

எந்த சூர்யனின் தேஜஸ், நம்முடைய புத்தி சக்தியைத் தூண்டுகிறதோ அந்த உன்னதமான தேஜஸை த்யானம் செய்கிறேன் என்று காயத்ரீ மகாமந்திரத்தால் துதிக்கப்படுகிறது. சூர்யன் புத்தி தீக்ஷண்யத்தை தருவதிலும், வ்யாதிகளைப் போக்குவதிலும் நிகரற்றவர்.

आरोग्यं भास्करादिच्छेत् ।

आदित्यः चक्षु र्भूत्वा अक्षिणी प्राविशत् ।

என்று வேதம் கூறுகிறது. சூர்யன் குஷ்டம் போன்ற அநேக வியாதிகளையும், குறிப்பாக நேத்ர ரோகங்களையும் போக்குபவர்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக்கு ஜாம்பவதி என்பவளிடம் உதித்த குமாரனான ஸாம்பன் என்பவர், தன்னுடைய கடும் வியாதி நிவாரணத்திற்காக துதி செய்த 'ஆர்யாத்வாதசகம்' என்ற 12 ச்லோகங்கள் அடங்கிய ஆதித்ய ஸ்தோத்திரத்தில் சிவரூபமான உம்மிடமிருந்து ஞானத்தையும், அக்னி ரூபமான உம்மிடமிருந்து ஐச்வர்யத்தையும், ஸவிதாவான உம்மிடமிருந்து ஆரோக்யத்தையும் விரும்புகிறேன் என்கிறார்.

शिवरूपाज्ज्ञानमहं त्वत्तो मुक्तिं जनार्दनाकारात्
शिखिरूपाच्चैश्वर्यं भवतश्चारोग्यमिच्छामि ॥

लोकानां ये प्रबोधं विदधति (श्लो. १०)

மோக்ஷத்தை அளிக்கக் கூடிய தத்வ ஞானத்தை அளிக்கும் ஸூர்ய ரச்மிகள்.

त्रय्यालोकैकदीपाः (श्लो. ११)

பரப்ரம்ம ஸ்வரூபத்தை விளக்கும் ஞானத்தை தருவதில் ஞானதீபமான ஸூர்யனின் கிரணங்கள்.

एवं यं वेद वेदत्रितयमयं (श्लो. ८९)

மூன்று வேதங்களின் ஸ்வரூபமானவரும், அறிவின் ஸ்வரூபமான ஸூர்யன் ஐச்வர்யத்தைத் தரட்டும் என்று, மயூரகவியினால் ஸூர்ய சதகத்தில் கூறப்பட்டிருக்கிறது. வித்யை, புத்தி கூர்மை, ப்ரம்மஞானம் ஆகியவற்றை அளிப்பதில் ஸூர்யன் ஒப்பற்றவர்.

तीर्थानि व्यर्थकानि ह्रद नद सरसि निर्झराम्भोजिनीनां
नोदन्वन्तो नुदन्ति ॥ (श्लो. ९३)

மேற்கண்ட ச்லோகத்தில் சூரியன் இல்லாத காலத்தில் (இரவு நேரத்தில்) கங்கை முதலிய புண்ய நதிகள், புஷ்கர்ணிகள், அருவிகள் முதலிய புண்ய தீர்த்தங்கள் மனிதர்களுடைய பாபங்களைப் போக்கும் திறனற்றவையாக ஆகின்றன என்று மயூரகவி கூறியிருக்கிறார்.

இவ்விதமான பலனையளிக்கக் கூடிய ஆதித்யனுடைய ரூபமான ப்ரவர்க்யத்தை அநுஷ்டிப்பதால், அதன் மந்திரங்களால் ப்ரார்த்திக்கப்படும் புத்தி கூர்மை, ஐச்வர்யம், வியாதியில்லாத தன்மை, ஒஷதி ஸம்ருத்தி, அம்ருதத்வம் ஆகியவற்றை நிச்சயம் அடையலாம்.

தற்காலத்தில் யக்ஞங்கள் நடத்துபவர்கள் மிகக் குறைந்துள்ளனர். யக்ஞ ஆசாரணைகள் சிறிதளவு உள்ள ஆந்திரம், தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், மகாராஷ்ட்ரம் ஆகிய ப்ரதேசங்களிலேயே, யக்ஞயாஜிகள் நூறு பேர்களுக்குள்ளாகவே இருப்பார்கள். யக்ஞ அநுஷ்டானம் செய்ய ஸாத்யப்படாத விஷயத்தில் மந்திரங்களை ஜபிப்பதன் மூலம் ஓரளவு பயனை அடையலாம். ஸம்ஹிதா பாராயணம், அநசன வேத பாராயணம் இவைகள் பாராயணத்தினாலேயே பலத்தை அளிக்கக் கூடியவை.

திருவிசநல்லூர் என்ற கிராமத்தில் நூதனமாக கட்டிய ஒரு க்ருஹத்தில் பைசாச

உபாதைகள் (ஆவிகள்) உபத்ரவம் மிகுதியாக இருந்து, வீட்டை மிகக் குறைந்த விலைக்கு விற்று விட, வாங்கியவர் க்ரமப்படி அருசன வேத பாராயணம் செய்து அந்த வீட்டிலிருந்து பைசாச உபாதைகள் முழுவதும் விலகி, அவர் அந்த வீட்டில் ஸௌக்யமாக நெடுநாள் வாழ்ந்தார். அவ் விதமே யக்ஞங்களில் ஏற்படும் தோஷங்களுக்கு நிவர்த்தி செய்வதான அச்சித்ரம் (अच्छिद्रं) அச்வ மேத யாகத்தின் மந்திரங்களடங்கிய அச்வமேதம் (अश्वमेधं) என்ற இரண்டு ப்ரச்னங்களை ஏகாதசி, துவாதசி திதிகளில் ஜபிப்பது மிகுந்த பயனை அளிக்கும்.

ஆரண்யகத்தின் முதல் ப்ரச்னமான அருண ப்ரச்னத்தின் மந்திரங்களைச் சொல்லி (नमस्कार प्रियो भानुः) என்ற முறையில் நமஸ்கரித்தால் கண் பார்வை நேர்மை பெறும். வியாதிகள் நிவர்த்தி யாகும். நமஸ்காரம் செய்ய முடியாதவர்கள், பாராயணம் செய்து ஓரளவு பயன் பெறலாம். அம் மாதிரியே ப்ரவர்க்ய ப்ரச்னங்களை பாராயணம் செய்வதால் ப்ரவர்க்யம் செய்த பயனை ஓர் அளவு பெறலாம்.

தவிரவும் ப்ரவர்க்யத்தைப் பாராயணம் செய் வதால் ஏற்படும் பயன்களை ஆன்றோர்கள் தெரி

விக்கின்றனர். ப்ரவர்க்ய பாராயணம் செய்ய மிக உகந்த தினம் ஞாயிற்றுக் கிழமையாகும்.

1. நல்ல மக்கட்பேறு கிடைப்பதற்கு ப்ரவர்க்ய மந்திரங்களை பாராயணம் செய்யலாம்.

2. படிப்பு வராமலிருக்கும் பிள்ளைகளுக்கு, ஒரு கும்பத்தில் ஜலம் நிரப்பி சூர்யனை ஆவாஹனம் செய்து ப்ரவர்க்ய ப்ரச்னங்களை ஜபம் செய்து பிள்ளைகளுக்கு அபிஷேகம் செய்வித்தால் புத்தி கூர்மை ஏற்படும்.

3. நவக்ரஹங்களில் சூர்யன், சுக்ரன் இவர்களின் தசைகளில் கெட்ட பலன் ஏற்படும் நிலை இருந்தாலும் சனி, ராகு இவர்களின் தோஷ நிவ்ருத்திக்கும் ப்ரவர்க்ய பாராயணம், நவக்ரஹ மந்திர ஜபமும் செய்து, குறிப்பிட்ட க்ரஹங்களுக்குரிய தான்யமும் தானமும் செய்தால் க்ரஹ தோஷம் விலகும்.

4. விஞ்ஞான ரீதியாக நோய் ஏற்பட்டதற்கான காரணம் அறிய முடியாதவர்களுக்கு ப்ரவர்க்ய பாராயணம் செய்யச் சொல்லி, கேட்டு பலனை அடையலாம். இத்துடன் திலதானம் செய்வதும் நல்ல பலனை அளிக்கும்.

5. காரணம் தெரியாமல் மன உளைச்சல் ஏற்பட்டு கஷ்டப்படும் காலங்களில். சிவன் சன்னதியில் அல்லது தக்ஷிணாமூர்த்தி சன்னதியில் சற்று உரக்க ப்ரவர்க்ய பாராயணம் செய்து அல்லது செய்வித்து ப்ராஹ்மண போஜனம் செய்வித்தால் மன நிம்மதி ஏற்படும்.

6. உடல் வலிமையிழந்து வியாதியுற்றவர் ப்ரவர்க்யத்தைப் பாராயணம் செய்து, பழங்களை நிவேதனம் செய்தால் ஆரோக்யத்தை அடையலாம்.

7. நியாய ஸ்தலங்களில் வியாஜ்யம் முதலியவற்றில், நியாயமான முறையில் ஸாதகமான தீர்ப்பைப் பெற, அம்பாள் ஸந்நிதியில் (முன்னிலையில்) பாராயணம் செய்யலாம்.

8. அந்திம காலத்தில் கூட ப்ரவர்க்ய பாராயணம் செய்யச் சொல்லி கேட்டு, அனாயாஸ மரணம் அடைய வழியுண்டு.

(ஆந்திர தேசத்தில் வேத விற்பன்னரான ஒரு வயோதிகர் வியாதியை அடைந்தார். ப்ரவர்க்யம் இரண்டு ப்ரச்னங்களையும் சில மாதங்கள் பாராயணம் செய்து, வியாதி குணமாகி பின் அனாயாஸ மரணம் அடைந்தார்.)

இவை மிகவும் சக்தி வாய்ந்த மந்திரங்கள் நாம் பாராயணம் செய்ய முடியாவிட்டால் வேதம் அறிந்தவரைக் கொண்டு பாராயணம் செய்விக்க வேண்டும். பிற வ்யாபாரங்களில் மனதைச் செலுத்தாமல் பாரயணம் செய்வதை, அவச்யம் நம் காது கொண்டு கேட்கவேண்டும். பாராயணம் செய்பவருக்கும் அச்சிரத்தை ஏற்டாது. ப்ரவர்க்ய ஜபம் ஒரே நாளிலும் பலன் தரலாம்; சில தினங்கள் கழித்தும் பலன் தரலாம். ஆனால் நிச்சயமாக பலன் உண்டு.

अत्युत्कटेन पुण्येन इहैव फलमश्नुते । पुण्यस्यानुत्कटत्वे तु चिरात्किंचित् फलं लभेत् । प्रति बन्धक बाहुल्ये फलं जन्मान्तरे भवेत् । न देवलोपजं व्यर्थं भविष्यति कदाचन ॥

மேற்கண்ட சுலோகத்தை பாராயணம் செய்து மகிழ்ச்சியான, வெற்றிகரமான வாழ்க்கையை நடத்தி வாழ்த்துக் கொண்டு வந்தனர் நம் முன்னோர்கள்.

அருணம் என்ற வேத பாகம், ஆர்யாத்வாதசகம், (12 ச்லோகங்கள்) அப்பய்ய தீக்ஷிதர்

இயற்றியுள்ள ஆதித்ய ஸ்தோத்ர ரத்னம் (12 ச்லோகங்கள்), மயூரகவி எழுதிய ஸூர்ய சதகம் (100 ச்லோகங்கள்) ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ரம் ஆகியவையும் ஸூர்ய உபாசனத்துக்கு உறியவைகள்.

श्रीप्रदं कान्तिदं नित्यं धनारोग्यविवर्द्धनम् ।
कुष्ठादि रोगशमनं महाव्याधि निवारणम् ॥

இவ்விதம் ப்ரவர்க்யத்தில் உபாஸிக்கப்படும் ஆதித்யனை வணங்கி புத்தி, ஐச்வர்யம், காந்தி, ஆரோக்யத்தின் விருத்தி, மகாரோகங்களின் நிவ்ருத்தி ஆகியவற்றின் பயனை அடைந்து, இன்புற்று, நீண்ட நாட்கள் ஆரோக்யத்துடன் வாழ்வோமாக.

அநுவாகம் 4-ம் ப்ரச்னம்

ப்ரவர்க்யம்

1. பூர்வ சாந்தி—அபீஷ்ட தேவதா ப்ரார்த்தனை
2. மகாவீர நிர்மாணம்—மந்திரங்கள்
3. மகாவீர ஸம்ஸ்காரங்கள்
4. (ப்ரவர்க்ய) ப்ரைஷ மந்திரங்கள்
5. (யஜ:) கரத்தின் மீது மகாவீர ஸ்தாபனம்
6. மகாவீர அபிமந்த்ரணம்
7. மகாவீர அவேக்ஷணம்
8. ப்ரவ்ருஞ்சனம் (மகா வீரத்தில் பால் சேர்த்தல்)
9. ஆஹவனியாக்னியில் ப்ரவர்க்ய த்ரவ்ய ஹோமம்
11. ப்ரவர்க்ய உத்வாஸனம்
12. மகா வீரத்தில் பால், தேன், தயிர் இவைகளைச் சேர்க்க மந்திரங்கள்
13. முதல் 40 வரை ப்ராயச்சித்த மந்திரங்கள்
41. அவாந்தர தீக்ஷை மந்திரங்கள் (விவரம் கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கிறது)
42. உத்தர சாந்தி

அநுவாகம் 5-வது ப்ரச்னம்

ப்ரவர்க்ய ப்ராமணம்

1. ப்ரவர்க்யம்—யக்ஞ சிரஸ்
2. ப்ரவர்க்ய த்ரவ்ய ஸம்பரணம்
3. மகாவீர நிர்மாணம்
4. மகாவீர ஸந்தாபனம் (ஸ்தாபனம்)
5. மகாவீர அபிமந்த்ரணம்
6. மகாவீர அவேஷணம்
7. ப்ரவ்ருஞ்சனத்ரவ்ய தோஹனம்
8. ப்ரவர்க்ய ஹோமம்
9. ப்ரவர்க்யத்ரவ்ய உத்ஸர்ஜனம்
10. உத்ஸர்ஜன ஸ்தானங்கள்
11. ப்ரவர்க்ய நாமாநி
12. ப்ரவர்க்ய பல விசேஷம்

தைத்ரீயாரண்யகம்

நான்காவது ப்ரச்னம்

ப்ரவர்க்யம்

अग्निर्वै सर्वा देवताः । विष्णुः सर्वा देवताः ।

एते वै यज्ञस्यान्त्ये तन्वौ यदग्निश्च विष्णुश्च ॥

ஆரண்ய காண்டத்தில் ப்ரவர்க்யம் என்று சொல்லப்படுகின்ற நான்காவது ப்ரச்னமும், அதன் மந்திரங்களின் விநியோகத்தைக் கூறுகின்ற ப்ராஹ்மணம் என்ற ஐந்தாவது ப்ரச்னமும் ஒன்றை ஒன்று அபேக்ஷிப்பதால், 4-வது. 5-வது ஆகிய இரண்டு ப்ரச்னங்களையும் சேர்த்து ஸ்ரீ சாயனர், பாஷ்யம் செய்துள்ளார். 'ப்ரவர்க்யம்' என்பது யக்ஞ புருஷரின் சிரஸாகவும், அதை அடுத்துச் செய்யப்படுகின்ற 'உபஸத்' என்பது கழுத்தாகவும் சொல்லப்படுகிறது.

முதல் அநுவாகமானது ப்ரார்த்தனா ரூபமாக (சாந்தி பாடமாக) அமைந்துள்ளது ஸ்ரீ போதாயனர் தன்னுடைய ச்ரௌத ஸூத்ரத்தில் மஹாவீரம் எனப்படுகின்ற பெரிய மண் பாத்திரத்தை ப்ரதிஷ்டை செய்வதற்கு முன்பு, இந்த சாந்தி பாடத்தைச் சொல்ல வேண்டும் என்

றும், ஆபஸ்தம்பர், பத்னிக்குப் பின்னால் (மேற்கில்) ஹோதா உட்கார வேண்டும் என்றும், முன் பக்கத்தில் (கிழக்கில்) அத்வர்யுவும், தெற்கில் (வலது பக்கம்) பிரம்மா, யஜமானர், ப்ரஸ்தோதா ஆகியவர்களும், வடக்கில் ப்ரதிப்ரஸ்தோதா, ஆக்னித்ரர், ஆகியோரும் உஷ்ண ஜலம் உள்ள மதந்தி கும்பத்தைத் தொட்டுக் கொண்டு மஹாவீர நிஷ்பாதனம் ஆன பின்பு, சாந்தி மந்திரத்தை ஜபிக்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள்.

अनुवाकः—१ नमो वाचे ।

அபீஷ்ட தேவதைகளும் ரிஷிகளும் ப்ரார்த்திக்கப் படுகின்றனர். மந்திரங்களின் உருவமான வாக்தேவதைக்கு நமஸ்காரம். முன்னால் சொல்லப் படும் மந்திரங்களுக்கும் பின்னால் சொல்லப்படக் கூடிய மந்திரங்களுக்கும் அதிதேவதைகளுக்கும் நமஸ்காரம். வாக்குக்குத் தேவதையான ஸரஸ்வதிக்கு நமஸ்காரம். ப்ரஹஸ்பதிக்கு நமஸ்காரம். ஆதியற்ற வேதத்தின் மந்திரங்களை உபயோகத்திற்கு கொண்டுவந்த ரிஷிகளுக்கும் மந்திரங்களைக் காப்பாற்றும் ரிஷிகளுக்கும் நமஸ்காரம். இந்த ரிஷிகள் என்னை (யஜமானனை) அலட்சியப்படுத்த வேண்டாம். நானும் அவர்களை அலட்சியப்படுத்த மாட்டேன். எல்லா தேவர்கள் விஷயமான ஸ்துதியாக இருப்பதால், தேவர்களுக்கு சுகத்தையளிப்பவரும், பூரணமானவரும், தேவர்களுக்குப் பிரிய

மானவருமான மந்திர ரூபமான வாக்தேவியை வணங்குகிறேன்.

தேவலோகம், பூலோகம், மிக பெரிதான இந்த அண்டம், சந்திரன், ஸூரியன், ப்ரம்மா, ப்ரஜாபதி இவர்கள் அனைவரும் அநுஷ்டிக்கப்படும் இந்த யாகத்தில் விக்னங்களை விலக்கி எனக்கு அநுக்ரஹம் செய்ய வேண்டும். பஞ்ச'பூதங்கள் பூலோகம் முதலான உலகங்கள், சரீரத்தின் காந்தி; கீர்த்தி, அநுஷ்டிக்கப்படும் நியமங்கள், வேதமோதுதல், உண்மை இவைகளை இந்த யாகத்தில் அநுகூலம் செய்யப் பிரார்த்திக்கிறேன். வந்தனங்களுடன் இந்த ப்ரவர்க்யத்தைச் செய்கிறேன்.

என்னுடைய சந்ததிகள், பசுக்கள் இவைகளுக்கு ஆதாரமாக இருக்கட்டும். ப்ராணன், அபாணன், ம்ருத்யு இவைகள் என்னைக் காப்பாற்றட்டும். மரண பயத்திலிருந்து விடுபட நான் ப்ரவர்க்யத்தைச் செய்ய தீர்மானித்து, இந்த இனிய கர்மாவைச் செய்கிறேன். இனிமையான மந்திரங்களைச் சொல்லி, தேவர்களுக்கு அவர்கள் பெயரைச் சொல்லியும், பித்ருக்களுக்கும் ஹவிர்பாகம் கொடுக்கிறேன். இந்த யாகம் செய்யும் என்னை மங்களமான பலனுக்காக தேவர்களும் பித்ருக்களும் அநுக்ரஹிக்கட்டும். மும்முறை பரமாத்ம ஸ்வரூபமான ப்ரணவத்தை உச்சரித்து மூன்று இடையூறுகளை நிவர்த்திப்பதின் மூலம் அமைதியை வேண்டுகிறேன்.

மூன்று இடையூறுகள்

சரீர சம்பந்தமான வியாதி, கண் முதலான அங்கங்களின் குறைவு, பலம் குறைவு முதலிய அத்யாத்மம் எனப்படும் இடையூறு, வெளியிலிருந்து ஏற்படும் புலி முதலிய துஷ்ட ப்ராணிகள் பாம்பு, தேள் முதலிய விஷ ஜந்துக்கள், சத்ருக்கள் முதலியவைகளால் ஏற்படும் ஆதிபௌதீகம எனும் இடையூறு, பேய்-பிசாசுகள், இடி, மின்னல், அக்நி உபாதை, மஹா உத்பாதங்கள், வெள்ளம் முதலியவைகளால் ஏற்படும் ஆதி தைவீகம் எனும் தெய்வீக இடையூறுகள், ப்ரவர்க்ய மந்திரங்களுக்கு இந்த அநுவாகம் பூர்வ சாந்தியாகவும், ப்ரச்னத்தின் முடிவான 42வது அநுவாஹம் (சன்ஞேவாத: பவதாம்) உத்தர சாந்தியாகவும் அமைகிறது.

இதன் பின்பு ஐந்து அநுவாகங்களினுல் ப்ரவர்க்ய க்ரியையும் அபச்யம கோபா என்ற ஏழாவது அநுவாகத்தில் அவகாச மந்திரங்கள் என்ற மந்திர ஹோமங்களும் அடுத்த மூன்று அநுவாகங்களில் ப்ரவருஞ்சனம் என்ற க்ரியையும், 11, 12-வது அநுவாகங்களில் ப்ரவர்க்ய உத்வாஸனமும், 13 அநுவாகம் முதல் 40வது அநுவாகம் வரை ப்ராயச்சித்தங்களும், நியமங்களும், 41-வது அநுவாகத்தில் அவாந்தர தீக்ஷையும, 42வது அநுவாகத்தில் உத்தர சாந்தியும் கூறப்படுகின றன.

अनुवाकः—२ युञ्जते मनः ।

ரித்விக்குகள், ஒன்றுபட்ட மனத்துடனும், யஜமானரும் ஒன்று சேர்ந்து தேவர்களைத் துதிப்போமாக. யக்ஞம் செய்யும் தேவர்களுக்கு மண்ணைத் தோண்டும் ஸாதனமாக இருக்கிறாய், என்று மரத்தாலான மண் தோண்டும் ஸாதனம் ப்ரார்த்திக்கப்படுகிறது. உபத்ரஷ்டா பிரம்மாவை நோக்கி மண் தோண்டும் இடத்திற்கு செல்ல, உங்களைப் பிரார்த்திக்கிறோம். பிரம்மாவும் உபத்ரஷ்டாவும் மருத் எனும் தேவர்களே! இந்திரனே! எங்கள் ஸமீபம் வாருங்கள் என்கின்றனர். மண் தோண்டும் இடத்தில் கிருஷ்ணாஜினத்தை ரோம பாகம் மேலாக இருக்கும்படி வைத்து மண் எடுக்க வேண்டும். ஸ்வர்க்கம், பூமி இவைகளின் ஸம்மதத்திலிருந்து மண் எடுக்கிறோம் என்று மந்திரம் சொல்கிறது. மூன்று முறை மந்திரத்துடனும் ஒரு முறை மந்திரமில்லாமலும் எடுக்க வேண்டும். பூமிதேவி மண் எடுப்பதனால் ஏற்படும் வேதனையை ஸஹித்துக் கொண்டு யக்ஞம் செய்பவருக்கு மண் தருவதால் ஒரே இடத்திலிருந்தே மீதமில்லாமல் மண் எடுக்க வேண்டும்.

பன்றி தன் முகத்தினால் கிளறிவிடும் மண் வராஹவிஹதம் எனப்படுகிறது. ஒரு சமயம் பூமியானது ஒரே ஜலமயமாக இருந்தது என்று வேதம் சொல்கிறது. (ஸ்ரீரம்-ஸலிலம்) ப்ரஜாபதி

ஸ்ருஷ்டி செய்யும் எண்ணத்தில் உலகம் ஜலமாக இருப்பதைக் கண்டு, அதன் நடுவில் ஒரு தாமரை இலை மிதப்பதைப் பார்த்தார். அத் தாமரை மலர் காம்பின் மீது இருப்பதைப் பார்த்து அக்காம்பின் அடியில் ஆதாரம் ஏதாவது இருக்கும் என்று எண்ணி, ஜலத்தில் மூழ்கி, காம்பின் அடிப் பக்கத்தை அடைந்தார். அங்கு மண் இருப்பதைப் பார்த்து தன் கோரைப் பற்களால் அந்த மண்ணை மேலே எடுத்து வந்து உலர்வதற்காக தாமரை இலை மீது அந்த ஈர மண்ணை மேலே பரப்பினர். இவ்வித மகிமையை உடைய இந்த மண் பன்றி உருவினுலான ப்ரஜாபதியினுல் வெளிக் கொண்டு வரப்பட்டதால் வராஹ விஹதம் எனப்படுகிறது

ஓ வராஹ விஹதமே! இந்த பூமி முழுவதும் வராஹத்தினுல் எடுக்கப்பட்டது என்று சொல்லி, பன்றியினுல் பறிக்கப்பட்ட மண்ணை சிறிதளவும் வீணுகாமல் ப்ரவர்க்யத்திற்கு எடுக்கப்படுகிறது. பூமி முழுவதிலிருந்தும் எடுக்கப்பட்டதாக ஆகிறது. ஏ கரையான்களே! ப்ராணிவர்க்கங்களுள் ஆதியான உங்கள் ஸம்பந்தமான மண் யக்ஞ சாதனமாவதால் நீங்கள் முதல்வர்களாக ஆகிறீர்கள் என்பது மந்திரம். பூமியின் அடியில் இருக்கும் நீரை உபயோகித்து மண்ணுடன் கலந்து கரையான்கள் தாங்கள் வசிக்கும் புற்றை ஏற்படுத்துகின்றன. பூமிக்கடியில் நீர் இருப்பதை கண்டு பிடிக்கும் ஸாமர்த்தியம் கரையான்களுக்கு உண்டு.

வராஹமிஹிரர் தன்னுடைய ப்ருஹத் ஸம் ஹிதா என்ற நூலில் பூமியின் அடியில் ஜலம் இருப்பதைக் கண்டு பிடிக்க, கரையான் புற்றுகள் இருக்குமிடமும் ஒரு அடையாளம் என்று குறிப் பிடுகிறார். புற்றின் உள்புறம் அநேக த்வாரங் களுடன் காது போன்ற அமைப்புடன் இருப்பதால் பூமியின் காது எனப்படுகிறது. இந்த கரையான் புற்றில் உள்புறம் புரையாக இருப்பதை ப்ரவர்க் யத்தில் சேர்ப்பதால் பூமியின் ஸாரம் சேர்க்கப் படுகின்றது. இதே கரையான்கள் யக்ஞ புருஷ னின் வில்லின் நாணை அறுத்து யக்ஞ புருஷனின் சிரஸை அறுத்தன. அடுத்து பூதீகம் எனப்படும் ஓஷதி விசேஷத்தை எடுப்பதற்கான மந்திரம். இந்திரனுக்கு பலமாக இருக்கிறாய். இந்தக் காரி யங்களினால் யக்ஞத்தின் ஸம்ருத்தியை அடை கிறோம். ப்ரவர்க்யத்திற்கு உதவியாக இருக் கிறீர்கள்.

ஒரு சமயம் வ்ருத்ரன் என்னும் அசுரனைக் கொல்வதற்காக இந்திரன் வஜ்ராயுதத்தை வீசினார். வஜ்ராயுதத்தினால் கொல்லப்படாமல் வ்ருதரன் ஓடிக் கொண்டே இருந்தான். அப் பொழுது பூதீகம் என்ற ஓஷதியானது வ்ருத்ர னின் கால்களைத் தடுக்கி விட, வஜ்ராயுதத்தால் அடிக்கப்பட்டு மாண்டான். அதனால் இந்திரனுக்கு அந்த ஓஷதியிடம் ப்ரியம் ஏற்பட்டது.

ஆட்டின் தோல், மான் தோல் இவைகளை உத்தேசித்து மந்திரம். ப்ரஜாபதி சம்பந்தமான

இந்த ப்ரவர்க்யுத்தில் அக்நி ஸம்பந்தமான நீங்கள் உபயோகப் படுகிறீர்கள்.

ஏ குதிரையே! ஆயுள், ப்ராணன், அபானன், வ்யானன், கண்கள், காதுகள், மனம், வாக், ஆத்மா இவைகளையும் என்னையும் நிலைநிறுத்து. உஷ்ணமான நீர், மகாவீரத்தில் இம்மந்திரத்தால் சேர்க்கப்படுகிறது. முன்பே இனிப்பான உன்னுடன் இனிப்பைச் சேர்க்கிறேன். ஈர மண்ணானது யக்ஞத்தின் கால்களாக இரு என்று, கை விரல்களால் பிசையப்படுகிறது. பங்க்தி எனும் சந்தஸால் அதிதி என்ற தேவதை உன் மேல் பக்கம் (கழுத்து எனப்படும்) துவாரத்தைச் செய்யட்டும்.

अनुवाकः—३ वृष्णो अश्वस्यनिष्पदसि ।

குதிரையின் சாணத்தின் புகையினால் ப்ரவர்க்யமே! வருணன், மித்ரன், த்ருவன் இவர்கள் தூபமிடட்டும், என்று தூபமிடப்படுகிறது. இந்த மஹாவீரமானது காயத்ரீ, த்ருஷ்டுப், ஜகதி சந்தஸ்களினால் ப்ரகாசத்தை அடைகிறது. அவ்விதமே மித்ரன் முதலிய தேவர்களால் புகழப்படுவதாக ஆகிறது. உன்னை ஸவிதா எனும் தேவன் சக்தி உள்ள இரு கைகளினாலும், கை விரல்களுடன் கூடிய பாணி தலத்தாலும் [உள்ளங் கைகளாலும்,] தூக்கி மணல் மீது வைக்கட்டும். பாணி என்பது மணிக்கட்டிற்கும், விரல்களுக்

கும் இடைப்பட்ட பகுதி. பிடிப்பதற்கு யோக்ய முள்ள இடம் என்றுகூறப்படுகிறது).

சாயன பாஷ்யம்:

सुपाणिः शोभनाभ्यां उद्यमन
कुशलाभ्यां पाणिभ्यां युक्तः।
स्वङ्गुरिः शोभनाभिः उद्वपन
क्षमाभिः अङ्गुलीभिः युक्तः॥

ஏ மகாவீரமே! ஸூரியன் போன்ற ஒளியுள்ள கண்களால் உன்னைப் பார்க்கிறேன். உன்னைப் பார்ப்பதனுல், எல்லா உலகங்களும் சக்தி உள்ள வையாக ஆகின்றன. பூமியில் பங்கப்படாத நீ எல்லா திக்குகளிலும் வியாபித்து இரு. அத்வர்யு வானவர் ப்ரஜைகள், பசுக்கள், ப்ரஹ்ம தேஜஸ் இவைகளுக்காக மணலால் திடப்படுத்துகிறேன் என்று மகாவீரத்தைச் சுற்றி கெட்டியாக்குகிருர். காயத்ரீ முதலிய மூன்று சந்தஸ்களாலும், வாக், அன்னரஸம், நெய் இவைகளினுல் நனைக்கிறேன் என்று பால் சேர்க்கிருர். மகாவீரமே! உன்னை மான் தோலினுல் கட்டி உயர வைக்கிறேன் என்று மான் தோலால் அத்வர்யு கட்டுகிருர். மான் தோல் அக்னி யக்ஞ ஸம்பந்தமானதால் ப்ராஹ்மணருக்கு உபயோகம் உள்ளதாகச் சொல்லுகிருர். ஆனுல் க்ருஷ்ணாஜினம் எனப்படும் மான் தோல் மீது உட்காரவோ படுக்கவோ கூடாது என்று ஆபஸ் தம்பர் கூறுகிருர்.

अनुवाकः—४ ब्रह्मन् प्रवर्ग्येण प्रचरिष्यामः ।

இந்த அநுவாகத்தில் ப்ரைஷ மந்திரங்கள் கூறப்படுகின்றன. ப்ரம்மாவே, நாங்கள் ப்ரவர்க்ய கர்மாவை அநுஷ்டிக்கப் போகிறோம். ஹோதாவே! நீர் ப்ரஹ்மஜ்ஞானம் எனும் மந்திரத்தால் ஸ்தோத்திரம் செய்யுங்கள். ஆக்நீத்ரரே! நீர் ரௌஹணம் எனும் புரோடாசத்தை கபாலத்தின் மீது பக்குவம் செய்ய வையுங்கள்.

ப்ரதிப்ரஸ்தாதாவே, நீங்கள் ஹாவனீயாக்னியில் பரிதியை வையுங்கள். ப்ரஸ்தோதாவே, ப்ரவர்க்யத்திற்கான ஸாமங்களை இசையுங்கள். ஏ ப்ரவர்க்யமே! ஸாமகானத்தால் திருப்தி அடைந்து இந்த ப்ரவர்க்ய கர்மா முடியும் வரை மிருந்த் ஜ்வாலையுடன் கூடியதாக இருப்பாயாக.

अनुवाकः—५ ब्रह्मन् प्रचरिष्यामः ।

இந்த கர்ம (யஜ்) காலத்தில் பிரம்மாவாக இருக்கும் ப்ரஹஸ்பதி ரூபமானவருக்கு தெரிவித்து செய்தால் இந்த கர்மா தோஷமில்லாததாக ஆகும். (தோஷமில்லாததாக இருக்க வேண்டும் என்றே ஹோம காலங்களில் ஒரு பிராம்மணரை ப்ரம்ம வரணம் செய்கிறோம்) ஏ கர்ம (யஜ்) பாத்திரமே! யக்ஞத்திற்காக உன் மேல் ஜலம் தெளிக்கிறேன். ஆஹவனீயத்தில் ப்ராணாய ஸ்வாஹா என்று பதினொரு ப்ராணாஹுதிகள் செய்யப்படுகின்றன. தேவஸ்யத்வா என்று இனிய நெய் தடவப்

படுகிறது. பூமியை உஷ்ணத்திலிருந்து காப்பாயாக என்று கீழ் கூறியபடி சொல்லவும்.

(खरो नाम महावीर सन्तापन प्रक्षालनार्थं सिकताभिः कल्पितो देशः उच्यते)

வெள்ளித்தகடு (ரஜத ருக்மம்) கரம், (खर: கரம் என்பது மகாவீரத்தை உஷ்ணப் படுத்துவதற்கும், அலம்புவதற்குமாக மணலால் ஏற்படுத்தப்பட்ட இடம். இது இருவகை. கரம், உச்சிஷ்டகரம்) என்பதில் வைக்கப்படுகிறது. முஞ்சிப்புல்லில் ஜ்வாலை செய்து மிகவும் ப்ரகாசமாக இருக்கிறாய் எனப்படுகிறது. குணத்தால் அதிகமான ஓ பாத்ரமே! ப்ரவர்க்யமே! புகை அதிகமில்லாமல் ஜ்வாலையுடன் கூடிய முஞ்சிப் புல்லின் மேல் இருரித் விக்குகளால், தகப்பனுருக்கு எவ்விதம் பிள்ளை ப்ரியமானவனோ அவ்விதம், இந்த யக்ஞத்தின் பொருட்டு ப்ரவர்க்ய பாத்திரம் நெய்யினால் நனைக்கப்பட்டு பின்னமடையாமல் அக்னியை அடைந்தது.

யஜமானன் ஜபம் செய்கிறார். கிழக்கு, தெற்கு மேற்கு, வடக்கு திக்குகளில் அக்நி, இந்த்ரன், ஸவிதா, மித்ராவருணர், ப்ரஹஸ்பதி இவர்களின் ஆதிக்யத்தினால் எனக்கு ஆயுள், புத்ரன், பிராணன், ச்ரோத்ரம், மந்த்ரபலம், காந்தி புகழ் இவற்றைக் கொடு.

ஏ பூமி தேவியே! எல்லா ப்ராணி வர்க்கங்களுக்கும் தாயான வணக்கத்துக்குரிய நீ, எனக்கு

ஹிம்சையில்லாமல் அழிவிலிருந்து என்னைக் காப்பாற்று.

ஓ, அக்னியே! என்னுடைய சத்ருக்கள் ஒன்று சேராமல் இருக்கட்டும். நாங்கள் கிழத்தன்மை, சிரமம் இல்லாமல் இருப்போமாக.

(மா அஸி) மா, அஸி என்ற ஆறு மந்திரங்கள். ஏ பரிதியே! நீங்கள் எல்லாவித ஸாமர்த்தியங்களும் உடையவர்களாக இருக்கிறீர்கள்.

ஏ மகாவீரமே, எங்களுடைய இந்த ஸ்தோத் திரங்களால் ப்ரீதியடைந்த நீ, எங்களை மிகுந்த ஐச்வர்யத்துடன் கூடியவராகச் செய்வாயாக.

ஏ, ருக்மமே! ஸூரியன் போன்ற நீ ஹவிஸ்ஸை அடைந்தவளுக எங்களுக்குரிய ப்ரயோஜனத்தைச் செய்வாயாக ருத்ரனைப் போன்று ஸ்துதி செய்யப்படும் நீ, மூவ்வுலகையும் காப்பாற்றுகிருய். உன்னைப் போன்ற பலமுள்ளவன் யாருமில்லை. காயத்ரி, த்ருஷ்டுப், ஜகதீ சந்தஸ் தேவதைகளாக இருக்கிருய். மது மது என்று மும்முறை துதிக்கப்படுகிருய்.

अनुवाक:—६ दश प्राचो दंश भासि दक्षिणा ।

ப்ரவர்க்யத்தில் அபிமந்த்ரணம் சொல்லப்படுகிறது. கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, ஆகா

யம் இவைகளில் பத்து ஜ்வாலைகள் வீதம் ப்ரகா சிக்கும் நீ, ஹிம்சை இல்லாதவராக என் பொருட்டு ஜ்வாலையுடன் இரு. அக்நி ஐச்வர்யத்துடன் காயத்ரி சந்தஸால் கிழக்கு திக்கில் உன்னை ப்ரகாச முள்ளவனாகச் செய்யட்டும். இந்திரன் ருத்ரர் களுடன் திருஷ்டுப் சந்தஸால் தெற்கு திக்கிலும், வருணன் ஆதித்யர்களுடன் ஜகதீ சந்தஸால் மேற்கு திக்கிலும், வாயுவானவர் மருத்துக் களுடன் அநுஷ்டுப் சந்தஸால் வடக்கு திக்கிலும் ப்ருஹஸ்பதி, விச்வேதேவர்களுடன் பங்க்தி சந்த ஸால் ஆகாயத்திலும் உன்னை பிரகாசிக்க செய் யட்டும். நீ ப்ரகாசத்தின் உருவமாக இருக்கிறாய். எங்களையும் ப்ரகாசமுள்ளவராகச் செய். முன் கூறப்பட்ட ஐந்து திக்குகளிலும் திசை ஒன்றுக்கு பத்து ஜ்வாலைகளுடன் ப்ரகாசிக்கும் நீ, எங் களுடன் நல்ல மனமுடையவராக எங்களுக்கு பலம், அன்ன ஸம்ருத்தி, அனுபவிக்கக் கூடிய போஜ்ய வஸ்துக்கள் இவைகளை அளிப்பாயாக. தேஜஸுடன் கூடிய நீ, எங்களுக்கு தேஜஸை கொடுக்கவும்.

अनुवाकः—७ अपश्यं गोपामविपद्यमानम् ।

ரித்விக்குகளும், யஜமானனும் மகாவீரத்தைப் பார்த்து 9 மந்திரங்களையும், பத்னி பத்தாவது மந்திரத்தையும் சொல்கின்றனர்.

இந்த பத்து மந்திரங்கள் சொல்லப்படும்போது, யஜமானனுடைய பத்னி, மகாவீரத்தைப் பார்க்கக்

கூடாது. பார்த்தால் ஸூரியனின் தீக்ஷணம் மிக்க மகாவீரம், யஜமானனுடைய பத்நியின் கர்ப்பா சயத்தை நாசம் செய்துவிடும் ஆகையால், பார்க்கக் கூடாது [இந்த மந்திரங்கள் அவகாச மந்திரங் கள் எனப்படுகிறது.]

மகாவீரரே! க்ரியைகளை ஒழுங்காகச் செய்வதில் காப்பவரும், அழிவில்லாதவரும் ஆதித்ய ரூபமாக எல்லா இடங்களிலும் சஞ்சரிப்பவரும், காலை நேரத்தில் நம்மை நோக்கி வருபவரும், மாலை நேரங்களில் நம்மை விட்டுத் திரும்பிச் செல்பவருமாகிய நீர், பல இடங்களில் தனித்தனியாக இருக்கும் ஜனங்களை உமது கிரணத்தால் போர்த்துகிறீர்.

अत्र प्राची: இங்கு மகாவீரத்திற்கு வஸந்த ருதுவின் ஸம்பந்தம் கூறப்படுகிறது.

ஏ மகாவீரமே! நீ மது, மாத்வி, மாது, மதூசீ (வஸந்த ருது தேவதைகள், அவர்களின் பத்னிகள்) ஆகியவர்களுடன் கூடிய நீ, எங்களைக் காப்பாற்றுகிறாய். உங்களை தேவதா ஸ்வரூபமாகப் பார்க்கிறேன்.

दक्षिणा: இந்த மந்திரத்தில் க்ரீஷ்ம ருதுவின் ஸம்பந்தம் கூறப்படுகிறது.

ஜ்யேஷ்ட ஆஷாட மாதங்கள் க்ரீஷ்ம ருதுவின் அவயவமாக ஆகி ஜ்யேஷ்ட மாஸமான அக்னி

ஆஷாட மாதமாகிய அக்னியுடன் மகாவீரம் ஸவிதா, ஸூரியன் இவர்களுடன் ப்ரகாசிக்கிறார்.

स्वाहा समग्निः இந்த மந்திரத்திலும் க்ரீஷ்ம ருதுவின் ஸம்பந்தம் உள்ளது. அக்னியைப் போன்று, மிக உஷ்ணமான ஜ்யேஷ்ட ஆஷாட மாதங்கள் சொல்லப்படுகிறது. ஸவிதா, ஸூரியன் இவர்களுடன் மகாவீரம் பிரகாசிக்கிறார்.

पति दिवो இந்த மந்திரத்தில் வர்ஷ ருதுவின் ஸம் பந்தம் கூறப்படுகிறது. வர்ஷ ருது ரூபத்துடன் மனதை சந்தோஷப்படுத்தும் பலவாறாக மேகங் களை தரிக்கிறீர். அப்பொழுது மழையினால் உண்டான ஓஷதிகளையும், விஸ்தீரணமான ஆகா யத்தையும் ஓஷதீகளினால் உண்டாக ஹவிஸ் களால் தேவர்களை போஷிக்கிறீர், தரிக்கிறீர். மரணமில்லாதவராக இருக்கிறீர். யாக தீக்ஷை யாகிய நியமத்தின் பலன் ஏற்படுகிறது.

हृदेत्वा मनसेत्वा இந்த மந்திரத்தில் சரத் ருதுவின் ஸம்பந்தம் கூறப்படுகிறது. மகாவீரமே! என் ஹ்ருதயத்தின் பொருட்டு, மனத்தின் பொருட்டு உன்னைப் பார்க்கிறேன். ஆச்வயுஜ, கார்த்திக மாதங்களில் சரத் ருதுவில் ஏற்படும் போகங் களின் பொருட்டு உன்னை பார்க்கிறேன்.

विश्वासां भुवांपते இந்த மந்திரத்தில் ஹேமந்த ருது வின் ஸம்பந்தம் கூறப்படுகிறது. ஜம்பூத்வீபம்

முதலிய இடங்களுடன் கூடிய பூமியில் இருக்கும் எல்லா ப்ராணி வர்க்கங்களுக்கும் அதிபனான மகாவீரமே! மனத்தில் உண்டானவர், வாக்கிலிருந்து உண்டானவர், தபஸிலிருந்து உண்டானவர், வேதத்திலிருந்து உண்டானவர், அனைவருக்கும் அதிபரான மகாவீரமே, ஹேமந்த ருதுவில் ஏற்படும் எல்லா போகங்களின் பொருட்டு உன்னைப் பார்க்கிறேன்.

(देवश्: त्वं) இந்த மந்திரத்தில் சிசிர ருதுவின் ஸம்பந்தம் கூறப்படுகிறது. ப்ரவர்க்யமே! சிசிர ருது ரூபமாக நான் சொல்லும் ப்ரார்த்தனையைக் காதால் கேட்பவரான நீர், தேவர்களே, இங்கு ஹோமம் செய்யப்படும் ஹோம த்ரவ்யங்களால் காத்து எங்களுக்கு சிசிர ருதுவில் ஏற்படும் எல்லா போகங்களையும் அளிப்பீராக.

இதன் பிறகு சில வாக்ய ரூபமான மந்திரங்கள் (யஜுஸ்) கூறப்படுகின்றன. பலவித ஸ்துதிகள் கூறப்படுகின்றன.

तपोजां वाचमस्मे தவங்களினால் அடையக் கூடியவையும், யக்ஞங்களில் உபயோகிக்கப்படுபவையும், சுத்தமானவையுமான மந்திர ரூபமான வாக்கை அதிகமாகத் தருவீராக.

यद्देवानां தேவர்களால் விரும்பப்படும் ஹவிஸ்ஸிற்கு உற்பத்தி ஸ்தானமாக (தன்னுள் வைத்துக் காப்பதாக) இருக்கிறது.

पिता मतीनां அவ்வப்போது தேவர்களுக்கு ஹவிஸ்ஸை கொடுக்க நினைக்கும் ஜனங்களுக்கு பயனைக் கொடுப்பதால், மகாவீரம் தகப்பனார் ஸ்தானத்தை அடைகிறது.

पतिः प्रजानां மேற்கூறிய ஜனங்களை நல்ல வழியில் நடத்துவதால் அதிபராக ஆகிறது.

मतिः कवीनां ச்ருதி, ஸ்ம்ருதிகளில் நிபுணர்களின் நிபுணத் தன்மைக்கு புத்தி ரூபமாக மகாவீரம் உள்ளது. இந்த ப்ரவர்க்யத்தைச் செய்வதால் மிகுந்த புத்தி கூர்மை ஏற்படுகிறது.

सं देवो देवेन மகாவீரம் ஸவிதா எனும் தேவதையுடன் யஜமானனுடைய மந்திரங்களைப் பெற்றுக் கொண்டு ப்ரகாசத்தை அடைந்தது.

मायुर्दास्त्वं இந்த மந்திரம் யஜமானனுடைய ஆயுளையும் க்ஷேமத்தையும் விரும்புகிறது.

पिता नो असि ஓ மகாவீரமே! நீ எங்களைக் காத்தருளுவதால் தகப்பனார் ஸ்தானத்திலிருக்கிறாய். நீ, எங்களை இவ்விதம் செய்து நல்ல வழியை, அடைவாயாக என்று உபதேசி.

मायुर्धाः तनू धाः இந்த மகாவீரம் நீண்ட ஆயுள் சரீர ஸௌக்யம், பால்கள், பசுக்கள் ஸம்ருத்தி, தேஜஸ், புகழ், ஐச்வர்யம் இவற்றைத் தருகிறது.

தன் காந்தியினால் ஆகாயத்தை நிறையச் செய்கிறது. மிக விஸ்தீரமானதாக இருக்கிறது. உன்னைப் போற்றுகிறோம். எங்களை ஹிம்சிக்காதே.

त्वमग्ने गृहपतिः ஏ அக்நியே, நீர் மனிதர்களுக்கெல்லாம வீட்டின் யஜமானனாக இருக்கிறீர். எங்களை ஐச்வர்யம் முதலிய ஸம்ருத்திகளால் நூறாண்டுகள் காப்பாற்றுவீராக. யக்ஞாதி கார்யங்களில் உத்ஸாகமுள்ள எங்களுக்கு உரிய பலன்களை இந்த ப்ரவர்க்யத்தால் செய்வீராக.

இந்த அவகாச மந்திரங்களின் கடைசி மந்திரமான இந்த மந்திரத்தை, ப்ரதிப்ரஸ்தோதா யஜமானருடைய பத்னிக்கு சொல்லி வைக்கிறார்.

இந்த மந்திரம் யஜமானருடை. பத்தினியினால் (மகாவீரத்தைப். பார்க்காமல் மறைக்கப்பட்டவளாக) ப்ரதிப்ரஸ்தோதாவினால் சொல்லுவிக்கப்பட்டு, சொல்லப்படுகிறது. त्वष्टीमते ते सपेय ஹே மகாவீரமே! உம்முடைய அனுக்ரஹத்தால் என் கணவரால் ரேதஸ் ஸம்பந்தம் ஏற்பட்டு சிசுவுக்கு உருவம் கொடுப்பதால் தவஷ்டா எனும் பெயருடன் கூடியவனான நீ, என்னை கணவனுடன் சேர்ப்பிப்பாயாக. கணவனின் சேர்க்கைக்குப் பின்பு, நல்ல குழந்தையை உண்டு பண்ணுவதில் சக்தியுள்ள ரேதஸ்ஸை ஆதரிப்பவளாக உன்னுடைய, கடைக்

கண் பார்வையினால், வீர்யமுள்ளவனும் யக்ஞ யாகாதி காரியங்களில் ஸமர்த்தனுமான குமாரனை யும், ஐச்வர்யத்தையும் அடைவேனாக. [இந்த அனுவாகத்தில் நெய்யுடன் கூடிய மகாவீரத்தில் ப்ரவ்ருஞ்சனம் (பால் சேர்ப்பது) செய்வது பற்றி சொல்லபடுகிறது.]

अनुवाकः—८ देवस्यत्वा सवितुः ।

ஸவித்ரு தேவனுடைய கட்டளையினால் அச்விநீ தேவர்களின் ஸாந்நித்யமுள்ள இரு புஜங்களாலும், பூஷா எனும் தேவதையின் ஸாந் நித்யமுள்ள கைகளாலும் உன்னை எடுக்கிறேன். அதித்யை என்ற மந்திரத்தால் பசுவின் பின் கால்கள் கயிற்றினால் அணையப்படுகிறது. பூஷாத்வா என்ற மந்திரத்தினால் கன்று பாலூட்ட விடப்படுகிறது. உச்ரம் கர்மம் என்ற மந்திரத் தால் கன்று பிரித்துக் கட்டப்படுகிறது. தானவः என்ற மந்திரத்தால் பால் சுத்தமாகவும் சிவப்பு நிறமில்லாததாகவும் (ரக்த ஸம்பந்தமில்லாத தாகவும்) இருக்க வேண்டுமென்று வேண்டப்படு கிறது.

அச்விநீ தேவர்கள், ஸரஸ்வதி, பூஷா, ப்ருஹஸ்பதி, இந்த்ரன் முதலிய தேவர்களுக்கான ஹவிஸ்ஸாகிய பாலைக்கொடு. (அதிகமாக பாலைச் சுரப்பாயாக.) காயத்ரியாக, த்ருஷ்டுப்பாக உள் ளாய் என்று ஸபம் என்ற கிடுக்கியையும், ஜகதி

சந்தஸ்ஸாக இருக்கிருய் என்று உபயமம் எனும் மரப்பலகையையும் கூறி அவற்ருல் மகாவீரம் அக்நியில் வைக்கப்படுகிறது. இந்த்ராச்விரு என்ற மந்திரத்தால் இந்திரன், அச்வினி தேவர்கள் இந்த ஹவிஸ்ஸை சாப்பிடட்டும். உரியவர்களுக்கு இந்த ஹவிஸ் தரப்படுகிறது. ஏ ஸூரிய கிரணகளே! மழைத் தருவதற்காக இந்த ஹவிஸ்ஸை அக்நியில் உங்கள் பொருட்டு ஹோமம் செய்கிறேன.

ஏ மகாவீரமே! தேஜஸின் உருவான நீ, ஆஹவநீயத்தை நோக்கிச் செல். தேவலோகத்தைக் கொடுப்பாயாக. அங்கு ராக்ஷஸர்களிடமிருந்து எனனைக் காப்பாற்று.

अनुवाक:—९ समुद्राय त्वा वाताय स्वाहा ।

இந்த அநுவாகத்தில் ப்ரவர்க்ய த்ரவ்யத்தை ஆஹவநீயாக்நியை நோக்கிக் கொண்டு வருவது (घर्म आनयनम्) கூறப்படுகிறது.

ஸமுத்ராயத்வா வாதாய ஸ்வாஹா என்று சொலலி வட்டு, மூச்சை விட்டு, ஐந்து வாதாய ஸ்வாஹா (அனவானம் எனப்படுபவை) என்ற மந்திரங்களும் (மொத்தம்) 13 மந்திரங்களால் கர்ம ஆனயனம் (கொண்டு வருதல்) செய்யப்படுகிறது. ஆஹவநீயத்தின் பின்னல் தெற்கில் இருக்கும் பிரம்மாவை எல்லா தேவர்களையும் திருப்தி செய்யட்டும் என்று கேட்கிருர். ஏ விச்வே

தேவர்களே! மதுரமான ப்ரவர்க்ய ஸாரத்தைக் குடித்து ஸௌக்யத்தை உண்டாக்குங்கள். அச்விநி தேவர்களே! உண்மையான இந்த ஹவிஸ்ஸை சாப்பிட்டு ஸம்ருத்தியை அடையுங்கள்.

ஐச்வர்யத்தை தரவல்ல இந்த ஹோமமானது, ஸ்விஷ்டக்ருத் எனும் அக்நிக்கு ஹோமம் செய்யப்படுகிறது. வஷட் என்பதற்கு பதிலாக வட் என்ற மந்திரத்தால் ஹோமம் செய்யப்படுகின்றது.

'கர்ம ம பாத மச்விநா' என்ற மந்திரத்தினால் உபஸ்தானம் செய்யப்படுகிறது. ஏ அச்விநிதேவர்களே! இந்த ப்ரவர்க்ய ஹவிர்பாகத்திற்கு த்யாவாப்ருத்வி அனுமதி அளித்துள்ளார்கள். த்யாவாப்ருத்வி அவர்களுக்கு நமஸ்காரம். ஏ ப்ரவர்க்யமே! மூன்று உலகையும், ப்ரவர்க்யத்தின் பாதுகாவலர்களான தேவர்கள், திக் தேவதைகள், பித்ருக்கள் ஆகியோர்களையும் அடைவாயாக.

अनुवाक:—१०—इषे पीपिहि ।

ப்ரவர்க்ய த்ரவ்யத்தின் மீதி பாகம் (சேஷம்) வேறான செயல் கூறப்படுகிறது. ஆஹவநீயத்தின் மேல் மகாவீரத்தை பிடித்துக் கொண்டு அதனுள் இருக்கும் நெய் சூடானதும், அதில் கொதிக்கும் தயிரை விட்டால் ப்ரவர்க்யத்தில் பொங்கிவிடும். அதை நோக்கி ப்ரதிப்ரஸ்தோதா

கூறுகிறார். இந்த ஹவிஸ்ஸிற்காகவும், பலத்திற்காகவும் பிராஹ்மணரின் பொருட்டும், காக்கும் சக்தி ஓஷதிகள், மரங்கள், த்யாவாப்ருத்வி, பிராணிகள் வேதாத்யயன ரூபமான பரஹ்ம தேஜஸ் யஜமானனை என் பொருட்டு, நன்மைக்காக ஸம்ருத்தியாக இரு. ப்ரகாசம், (ஐச்வர்யம்) தனம், இந்த்ரிய சக்தி ஐச்வர்யம் முறையே அவற்றின் பொருட்டு நான்கு திக்குகளிலும் ஹோமம் செய்கிறேன். அக்நியில் மகாவீரத்தை வைப்பதற்கு மந்திரம்:-ப்ராஹ்மணருக்கும், யக்ஞாதிகளுக்கும், க்ஷத்ரியர்களுக்கும் அவர்களுக்குரிய காரியங்களுக்காகவும், வைச்யர்களுக்கு அவர்களுடைய ப்ரஜைகளுக்காகவும் இரு. சத்ரு க்ஷயமாக இரு. கல்யாணத்தில் பூஷ்ணே ஸரஸேஸ்வாஹா என்று ஆரம்பித்து, ஐந்து சகல (ஸமித்து) ஹோமங்கள் செய்யப்படுகின்றன. ஹுதபாகர்கள், அஹுதபாகர்கள் என்று இருவிதம். யார் ஹுதபாகர்களோ அவர்களுக்கு இந்த ஆஹுதி. ஸோமயாகத்தைச் செய்தவர் ஸோமபா எனப்படுகிறார்

ஸோமபரான பித்ருக்களுக்கு ப்ரவர்க்யத்தில் ஆஹுதி செய்யப்படுவதால், பித்ருக்கள் ப்ரவர்க்யம் செய்யும் யஜமானனும் கர்மபா: (ஈர்ம்பா:) எனப்படுகிறார். ஆறுவது ஸமித்து லேபங்களைத் துடைத்து பாராமல் 'ருத்ராய ருத்ஹோத்ரே ஸ்வாஹா' என்று வடக்குப்புறம் எறியப்படுகிறது. கையை ஜலத்தால் அலம்பிக் கொள்ளவும்.

ஆபஸ்தம்ப பரிபாஷா ஸூத்ரம் கூறுகிறது. ருத்ரர், ரக்ஷஸ், நிருருதி, பித்ரு ஸம்பந்தமான மந்திரங்களைச் சொல்லி ஹோமம் செய்தாலும் நறுக்குதல், பிளத்தல். கர்மாவின் பின்பு தர்ப்பங்கள் (க்ரூரத். தன்மையின் நிவ்ருத்திக்காக) முதலியவைகளை தூக்கி எறிதல், ஜபம். ஹோமம், பூஜை முதலிய கர்மாக்களின் மத்தியில் தன்னுடைய சரீரத்தை தொட்டு கொண்டாலோ (எப்பொழுதுமே நாபிக்குக் கீழ்ப்பட்ட பாகங்களைத் தொட்டாலோ) ஜலத்தைத் தொடவேண்டும். (அபஉபஸ்பர்சனம்) தேவையான ஆஹுதிகள் சேர்ந்து வந்தால் கடைசி ஆஹுதிக்கு பிறகு, அபஉபஸ்பர்சனம். ப்ரதிப்ரஸ்தோதா ப்ரோடாசத்தால் இரு ஹோமங்கள் ஸூரியன். அக்னியை உத்தேசித்துச் செய்கிறார் ஏ அக்னியே. பகல், இரவுகளில் என்னைக் காப்பதற்கு இந்த ஸமித்து வைக்கப்படுகின்றது. ஆயுள், தேஜஸ் இவற்றை அக்னி கொடு. ஹோத்ர மந்திரம் சொல்லப்படுகிறது. அக்னிர் ஜ்யோதிஜ்யோதிராக்னி: ஸ்வாஹா, ஸூர்யோஜ்யோதிர், ஜ்யோதிஸ்ஸூர்ய: ஸ்வாஹா, அபஉபஸ்பர்சனம் செய்து முள்ளுள்ள ஸமித் ஹோமம் செய்யப்படுகிறது.

மதுரமான இந்த ப்ரவர்க்ய ஹவிஸ் ஹோமம் செய்யப்பட்டது. புஷ்டியை அளிப்பதாக அம்ருதத்துடன் கூடிய ப்ரவர்க்ய ஸாரத்தை சாப்பிடுவோமாக.

अनुवाकः—११ घर्मं या ते दिविशुक् ।

ப்ரவர்க்ய உத்வாஸநம் சொல்லப்படுகிறது. தக்ஷிணையில்லாத யக்ஞம் நிஷ்பலன் என்று சொல்லப்பட்டுள்ளது. இது எல்லா ஹோமங்களுக்கும் பொருந்தும். ப்ரவர்க்யத்தை உத்வாஸனம் செய்யும் பொழுது தக்ஷிணை தானம் கூறப்படுகிறது. ஆக்னீத்ரருக்கு வெள்ளாடும், ப்ரஹ்மாவுக்கு நான்கு வயதுடைய பசுவும், ஹோதாவுக்கு இளம் கன்றுடன் கூடிய பசுவும், அத்வர்யுவுக்கு ருக்மம் எனும் ஸ்வர்ணத்தால் ஆன தகடு (ப்ரவர்க்யத்தில் உபயோகப்படுத்தப்பட்டது) தக்ஷிணையாகத் தரப்படுகிறது.

ஆஹவநீயத்திற்கு வடபுறம் ஸம்ராட் என்னும், வாஹனத்தில் எல்லா ப்ரவர்க்ய ஸாதனங்களையும் வைத்து மூன்று சலாகைகளை எடுத்துக் கொண்டு ஒரு சலாகையை ஆஹவனீயத்தில் ஜ்வலிக்கச் செய்து, அதில் அத்திமர ஸ்ருக்கினால் நான்கு முறை நெய் எடுத்துக்கொண்டு, கர்மயாதே என்ற மந்திரத்தால் ஹோமம் செய்யப்படுகிறது. இவ்விதம் 3 ஹோமங்கள் செய்யப்படுகின்றன. தற்சமயம் நடைமுறையில் சலாகை ஹோமங்கள் செய்வது இல்லை. அத்திமர ஸ்ருக்கினால் மட்டும் மூன்று ஹோமங்களும் செய்யப்படுகின்றன. ஆஹவநீயத்தில் சலாகைகள் அல்லது ஸ்ருவம், அநுநோத்திய, அன்வித் அநுமதே என்ற இரு மந்திரங்களால் எரிக்கப்படுகிறது. இவை அனுமதி

தேவதைக்கு, உத்தேசம், ப்ரவர்க்யம், உத்வாஸனம் செய்யப்படும் இடம் வரை மூன்ருக பிரித்து மூன்று மந்திரங்கள் கூறப்படுகின்றன.

மூன்று உலகங்களில் உள்ளவரை காப்பதற்கு, ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைச்யர் இவர்களை காப்பதற்கு ப்ராணன், கண்கள், காதுகள் இவைகளுக்காகவும் உன்னைப் பின் (தொடருகிறோம்) தொடர்வாயாக அத்வர்யு உதகும்பத்தை எடுத்துவந்து வல்குரஸி என்ற மந்திரத்தால் உத்திரவேதியை 3 முறை ப்ரிஷேசனம் செய்கிருர் உத்திரவேதியே! துக்கம் நீங்கி சௌக்யத்தை அடைகிருய் என்ற மந்திரத்தால் உத்தரவேதியைத் தொடவேண்டும். நான்கு கோணங்களுடன் கூடிய உத்தரவேதி, பக்கத்தின் பூமியின் நாபியாக இருக்கிறது ஏ கர்மமே (ஏசி) எனும் பாத்திரமே! நெய் கலந்த தயிரிஞல் சரீர போஷணையையும், சந்துஷ்டியையும் அடைவாயாக. நாங்களும் சரீர போஷணை, மன சந்துஷ்டி இவற்றை அடைவோமாக ஊர்க் என்பதஞல் சரீர பலத்தைத் தரும் ரஸமாகவும், அன்னாத்யம் என்பதஞல் வயிறு நிரம்புவதையும் குறிக்கிறது.

உத்தரவேதியை நோக்கி எட்டு மந்திரங்களால் உபஸ்தானம் செய்யப்படுகிறது. 1. ரந்திர் நாமாஸி, 2. ஸமஹூமாயுஷா, 3. வ்யஸௌ, 4. அசிக்ரதத், 5. சிதஸி ஸமுத்ரயோநி:, 6.

விச்வாவஸு, 7. விச்வாவஸுரஸி, 8. ஸஸ்நீம விந்தத் என்று மந்திரங்கள். ரந்தி என்ற கந்தர்வனைப்போல் சந்தோஷத்தைத் தருகிறாய். இந்த ப்ரவர்க்யத்தால் சத்ருக்கள் நாசமடையட்டும். அபீஷ்டங்களைத் தரவல்ல ஸூரியனுடன் சேர்ந்து பிரகாசிக்கிறது. யக்ஞத்தினால் ஸாமர்த்ரமேற்பட காரணமானவரும், சந்தோஷத்தை உண்டு பண்ணுபவரும், மிகுந்த வேகமுள்ளவரும், சயனம் என்ற யாகத்தில் ஸுவர்ணம் போன்ற இரக்தை உள்ளவரும், சக்திமிக்கவரும், குணமுள்ளவரும், யாகம் செய்பவர்களின் பக்கத்தில் ஸ்திரமாக இருப்பவருமான உமக்கு நமஸ்காரம். இக்கர்மாவில் ஏதாவது ரித்விக்குகளால் வைகல்யம் ஏற்பட்டால் விச்வாவசுவை நினைப்பதால் நிவ்ருத்தியாகட்டும். ஒரு ஸமயம் யக்ஞ தேசத்தில் அழைத்து வரப்படும் ஸோம ராஜாவை விச்வாவஸு எனும் கந்தர்வன் அபஹரிப்பதை ஜலாபிமானி தேவதை பார்த்து, ஜலாபிமானி தேவதை யக்ஞ நிமித்தமாக கந்தர்வன் ஸமீபம் சென்றது. இந்திரன் தற்செயலாக சென்றிருப்பதை அறிந்து ஜலாபிமானி தேவதை ஸமீபம் வேகமாகச் சென்றபொழுது, ஸூரியனுடைய கிரணங்களால் சுற்றிலும் சூழப்பட்டு வேலி போன்று இருக்கும்படி செய்தார்.

யக்ஞத்தில் ஏதாவது அங்கத்தின் வைகல்யம் தோஷம் ஏற்பட்டால், இந்த வ்ருத்தாந்தத்தை

நினைத்தால் அது நீங்கிவிடும். கந்தர்வன் தோஷங்களைச் சொல்லட்டும். நதிகளின் சுத்தி செய்யும் தன்மையை கந்தர்வன் அறிந்து பிராணிகளுக்குச் சொன்னார். ஸோமபானம் செய்யும் ப்ரவர்க்யமே! குழந்தைகளுக்கு, புஷ்டியான ஐச்வர்யத்தை தருவாயாக. ப்ரவர்க்யத்தை உத்வாஸனம் செய்வதால் ஏற்படும் தோஷங்களை இம்மந்திர படனத்தால் நிவ்ருத்தி அடைந்து ஸோமபான பலனை அடைகிறார்.

உத்வயம் தமஸ: என்ற மந்திரத்தால் உபஸ்தானம் செய்து, உதுத்யம் ஜாதவேதஸம், சித்ரம் தேவானாம் என்ற இரு மந்திரங்களால் கார்ஹபத்யாக்நியில் உபஸ்தானம் செய்யப்படுகிறது. அக்நியே, தேவர்களிடம், இந்த ப்ரவர்க்யத்தை குறித்தும் எங்களுக்கு பலனைத் தருவது குறித்தும் தெரிவிக்கவும்.

ப்ரவர்க்யத்தை உத்தரவேதியின் கிழக்கு அல்லது மேற்கு பாகத்தில் உத்வாஸனம் செய்ய வேண்டும். அல்லது அதனுடைய ஸ்தானத்திலேயே (நீரின் நடுவில்) உத்வாஸனம் செய்ய வேண்டும். தண்ணீரிலிருந்து மின்னல் ஸ்வரூபமான ஜ்யோதி உண்டாயிற்று. ப்ரவர்க்யமும் ஜ்யோதி ஸ்வரூபம், இன்னும் இரண்டு இடங்களும் கூறப்படுகின்றன. [அத்தி மரம், ஜலமில்லாத மணல் ப்ரதேசத்தில் இருக்கும் தர்ப்ப ஸமூகம்.]

अनुवाकः—१२ महीनां पयोऽसि ।

11-வது அனுவாகத்தில் घर्मँ दत्ते अन्नमेतत् पुरीषं என்று தயிர் மது இவைகளால் ப்ரவர்க்யத்தில் நிரப்புவதற்கு முன்பு சொல்லக் கூடிய 3 மந்திரங்கள் சொல்லப்படுகின்றன. பசும்பால் கொண்டுவரப்பட்டு விடப்படுகிறது. தேவர்களின் பொருட்டு ஸம்பாதிக்கப்பட்டதாக (தெரிகிறது) இருக்கிறாய்.

இம்மந்திரத்தால் தேன் சேர்க்கப்படுகிறது. (ஓஷதிகளின் புஷ்பத்தின் ஸாரம் தேனீக்களால் எடுக்கப்பட்டு தேன் ஆகிறது) ஓஷதிகளின் ரஸமான நீ, ஜ்யோதிஸ்ஸினால் ப்ரகாசிக்கிறீர். இம்மந்திரத்தால் தயிர் சேர்க்கப்படுகிறது. அன்ன ஸம்ருத்தியுடன் கூடிய உன்னை அன்ன ஸம்ருத்திக்காக சேர்க்கிறேன்.

இத்துடன் ப்ரவர்க்யம் முடிந்து ப்ராயத்சித்தங்கள் கூறப்படுகின்றன. ப்ராயச்சித்தங்கள் இவைகள் யக்ஞம் முதலிய கர்மாக்களில் ஏதாவது இடையூறுகள் அல்லது குறைபாடுகள் நேரிட்டால், அவைகளினால் ஏற்படும் கெடுதிகளிலிருந்து யஜமானன் முதலியோரைக் காப்பாற்றி, கர்மாவின் பலன்கள் கிடைப்பதற்காகச் செய்யப்படுபவை. கர்மாவில் கூடியவரை தோஷம் ஏற்படாமல் நல்ல முறையில் கர்மாவைச் செய்வது சிலாக்யம. சிலர் அச்ரத்தையுடன் கர்மாவை தோஷம் ஏற்படும் வகையில் செய்ய, பின்பு ப்ரா

ப்ராயச்சித்தம் செய்வது வேண்டுமென்றே வியர் திரியை வரவழைத்துக் கொண்டு, பின்பு வைத்தியம் செய்து கொள்வது போன்றதேயாகும்.

अनुवाकः—१३ अस्कान्द्यौः पृथिवीम् ।

மகாவீரம் பொங்கி வழிந்தால் 'அஸ்கான்த் யௌ:, அஸ்கான்ஜநி' என்ற இரு மந்திரங்களை கூறவேண்டும்.

अनुवाकः—१४ यापुरस्तात् विद्युदापतत् ।

ப்ரவர்க்ய பாத்திரத்துடன் செல்லும்போது இடி, மின்னல் இவை ஏற்பட்டால், यापुरस्तात् विद्युदापतत् என்ற மந்திரத்தால் ஹோமம் செய்ய வேண்டும்.

अनुवाकः—१५ प्राणायस्वाहा ।

अनुवाकः—१६ पूष्णेस्वाहा ।

கர்ம சம்பந்தமான குறைகள் ஏற்பட்டால் 'ப்ராணாய ஸ்வாஹா' என்று ஆரம்பிக்கும் ஏழு மந்திரங்களாலும், 'பூஷ்ணே ஸ்வாஹா' என்று ஆரம்பிக்கும் ஏழு மந்திரங்களாலும் ஹோமம் செய்யவேண்டும்.

अनुवाकः—१७ उदस्य शुष्माद्भानुः ।

உதஸ்ய சுஷ்மாத்பாநு: என்ற மந்திரத்தால் உபதானம் செய்யப்படுகிறது.

अनुवाक:—१८ यास्ते अग्न ।

குலாயினி, என்ற இஷ்டகை உபதானம்.

अनुवाक:—१९ आङ्गिरसि वैश्वानरीष्टि ।

அத்வர்யு அக்நிரஸி என்ற மந்திரத்தால் அக்நியை அபிமர்சனம் செய்கிறார் (தொடுகிறார்). ஹே இஷ்டகைகளே! நீர் அக்னியாக இருக்கிறீர். தனல்கள் இல்லாமல் இஷ்டகைகளின் உருவமான அக்நி, ஐந்து வருஷங்கள் கூடிய யுகத்தின் வருஷங்களின் உருவமாகவும், ஆறு ருதுக்களின் உருவமாகவும், இஷ்டகைகள், மாஸங்கள், பக்ஷங்கள், ருதுக்கள், ஸம்வத்ஸரங்கள், அஹோராத்ரங்கள் உருவமான இஷ்டகைகளோ, ப்ரஜாபதியுடன் அங்கீரஸுடன் கூடி இங்கு ஸ்திரமாக (உறுதியாக) இருங்கள்.

अनुवाक:—२० भूर्भुवस्सुव: ।

இந்த மந்திரம் ஸர்வப்ராயச்சித்தம் எனப்படுகிறது. மூன்று உலகங்களும் ஸௌக்யத்தைத் தரவல்லவை என்று பொருள்.

மகாவீரம் அசைந்தால் 'ஊர்த்வ ஊஷுண, ஊர்த்வோந பாஹி' என்ற இரு மந்திரங்களால்

எடுத்து வைக்கவும். விரிந்து விட்டால் விषूद्वान् என்ற மந்திரத்தால் சேர்க்கவேண்டும். பின்ன மான மஹாவீரத்தை ஹே இந்திரனே! விரிந்த இந்த பாத்திரத்தை ஒன்று சேர்ப்பாயாக. யத்ரு தேசித் என்ற மந்திரத்தால் உளுந்துமாவு போன்ற பூசும் ஸாதனங்களால் பூச வேண்டும். 'புனரூர்ஜா ஸஹரய்யா' என்ற மந்திரங்களால் பாத்திரம் சிறுசிறு துண்டுகளாக உடைந்து விட்டால் இம் மந்திரங்களால் தள்ளிவிடவும்.

அதி உஷ்ணத்தினுல் பால் ரூபமான ப்ரவர்க்ய த்ரவ்யம் பாத்திரத்தின் மேல் பொங்கினுல் 'मानीपयं, मान: कृधुभि:, उपनोमित्रावरुणौ, இத்மம் மே வருண, தத்வா யாமி, த்வங்நோ, அக்நே, ஸத்வங்நோ அக்நே, த்வமக்னே அயாஸி' என்ற எட்டு மந்திரங்களும ப்ராயச்சித்தமாக கூறப்பட்டுள்ளன.

ஸாயம் காலத்தில் ப்ரவர்க்யம் செய்து கொண்டிருக்கும் போது, ஸூரியன் அஸ்தமித்தால் उद्वयंतमसस्परि என்று சொல்லிய உபஸ்தானம் செய்து, उदित्यं जातवेदसं, चित्रंदेवानां என்ற இரு மந்திரங்களால் கார்ஹபத்யாக்நியில் ஹோமம செய்து, மறுநாள் காலை यदः सुपर्णः என்ற மந்திரத்தால் ஸூரிய உபஸ்தானம செய்ய வேண்டும்.

अनुवाकः—२१ भूर्भुवस्सुवः ।

இது எல்லாவற்றிற்கும் ப்ராயச்சித்தம் ஆகிறது. தயிருடன் கூடிய ப்ரவர்க்யகத்தை

சாப்பிடுகிருர்கள். ப்ரவர்க்ய த்ரவ்யத்தை யஜமானன் மட்டுமே சாப்பிடுகிருர். மற்றவர்கள் சாப்பிடுவது இல்லை. முகர்வது மட்டுமே செய்கிருர்கள், अयज्ञियमेव, तन्नेवप्राशितन्नेदप्राशितं என்று வேதத்தில் (பிண்ட பித்ரு யக்ஞத்தில்) சொல்லப்பட்டுள்ளதால், முகர்வதே ப்ராசனத்திற்கு ஸமம்.

என்னிடம் அதிக வீர்ய ஸம்பத்து, உத்யாஸம், யக்ஞ ஸாமர்த்தியம் எல்லா காரியங்களிலும் திறமை இவைகள் எனக்கு ஏற்படட்டும். மூவ்வுலக அபிமானி தேவதைகள் அநுக்கிரஹிக்கட்டும் ப்ரவர்க்யம் திடமான மனது, காந்தி, யக்ஞம், பால், தேஜஸ், கீர்த்தி, உண்மை, தபஸ் இவைகளோடு நன்கு ப்ரகாசிக்கட்டும். அப்பேர்ப்பட்ட ஷீத்தை நாங்கள் சாப்பிடுகிருேம்.

अनुवाकः—२२ यास्ते अग्ने घोरास्तनुवः।

அடுத்த இரு அனுவாகங்களில் அக்னியின் இரு (உக்ர) கோரதனுக்கள் கூறப்படுகின்றன. 1. பசி, 2. தாகம், 3. நெய், பால் இவைகளின் ஆஹுதிக்குறைவு, 4. ஆஹுதியற்றநிலை 5. சாப்பிடும் இச்சை, 6. நீர் பருகும் இச்சை, 7. ஸேதி, 8. கவனக் குறைவு அல்லது கெட்ட மனம் ஆகிய அக்னியின் இந்த கோரரூபங்கள் சத்ருருவை அடையட்டும்.

अनुवाक:—२३ स्रिक् च स्नीहितञ्च ।

1. ஸ்ரிக், 2. ஸ்நீஹிதி, 3. ஸ்நீஹிதி, உஷ்ணம், 5. சீதம், 6. உக்ரா, 7. பீமா, (பயங்கரம்) 8. ஸதாம்நி, 9. ஸேதி:, 10. அநிரா என்ற இந்த 10 கோரதனுக்களும் என் சத்ருக்களை அடையட்டும்.

अनुवाक:—२४ धुनिश्च ध्वान्तश्च ।

1. துனி, 2. த்வாந்தர், 3. த்வனர், 4. த்வனயர், 5. நிலிம்பர், 6. விலிம்பர், 7. விக்ஷிபர் ஆகிய இந்த ஏழு மருத் கணங்களின் பெயரில் கபாலங்கள் வைக்கப்படுகின்றன.

अनुवाक:—२५ उग्रश्च धुनिश्च ।

1. உக்ரன், 2. துனி, 3. த்வாந்தர், 4. த்வனர், 5. த்வனயர், 6. ஸஹஸ்வான், 7. ஸஹமானர் ஆகிய இந்த ஏழும் மருத் கணங்களின் பெயர்கள். தவிர, 1. ஸஹஸ்வான், 2. ஸஹீயான், 3. ஏதி, 4. ப்ரேதி, 5. விக்ஷிப: ஆகிய இந்த ஐந்து பெயர்களும் இருக்கலாம். இந்த 2 அநுவாகங்களில் இருக்கும் பெயர்களும் யக்ஞத்தில் கபாலங்களாக இருக்கின்றன.

अनुवाकः—२६ अहोरात्रे त्वोदीरयताम् ।

திருடர்களால் மகாவீரம் அபஹரிக்கப்பட்டால், கார்ஹபத்ய அக்னியில் ஸ்ருவத்தால் அஹோராத்ரே என்ற மந்திரத்தால் ஹோமம் செய்ய வேண்டும்.

अनुवाकः—२७ खट् फट् जहि । छिन्दि, भिन्दि, हन्धि।

ஆபிசார ப்ரயோகத்தில் கட், பட், ஜஹி. என்ற மூன்றும் வார்த்தைகளும் கொல்லுதல் என்று அர்த்தம் மேலும், சிந்தி—வெட்டு, பிந்தி—பிளவுங்கள், ஹந்தி — கொல்லுங்கள் என்று அர்த்தம். ஆக இந்த ஆறும் குரூரமான வார்த்தைகள்.

अनुवाकः—२८ विगा इन्द्र ।

ஏகவ்ருகம் என்றால், ஓநாய் என்று அர்த்தம் காட்டில் தனியாக சஞ்சரித்துக் கொண்டு இருக்கும் குழந்தைகளேயும், பசுக் கன்றுகளேயும் கொல்லக் கூடியது ஓநாய்.

ப்ரவர்க்யத்துடன் செல்லும்போது, இந்த ஓநாய் வந்தால் 'விகா இந்த்ர' என்ற மந்திரத்தை சொல்ல வேண்டும். இருபுறமும் அக்னியுள்ள கொள்ளியினால் 'அக்நே அக்நிநா' என்ற மந்திரத்தைச் சொல்லி, ஓநாய் மீது வீசவும். பின்பு. அந்த அக்நியை உபஸ்தானம் செய்ய வேண்டிய மந்திரம். 'ஸக்ருத்தே அக்நே—அக்நியே' என்று ஒருமுறை நமஸ்கரிக்கின்றேன். அவ்விதமே இரு

முறை, மும்முறை, நான்கு முறை, ஐந்து முறை, பத்து முறை, நூறு முறை, ஆயிரம் முறை, லட்சம் முறை உம்மை நமஸ்கரிக்கின்றேன். என்னை ஹிம்ஸிக்காதீர். ஓநாய் எவ்வளவு முறை எதிர்பட்டாலும் ஒவ்வொரு முறையும முழுமை யாகவோ பகுதியாகவோ சொல்லலாம்.

अनुवाकः २९—अमृन्मुखो ।

எப்பொழுது கழுகு, நாய், குரங்கு, பயங்கர மான காட்டாடு, நீண்ட மூக்குடைய பெண் காக்கை, பெண் கழுதை, ஆந்தை, ரக்ஷஸ்ஸினுல் பாதிக்கப்பட்ட சகுனி, இவை கத்தினுல் (சப்த மிட்டால்) அவைகளுக்குத் தகுந்த பெயர்களைச் சேர்த்து பதங்களை உபயோகித்து கொள்ளியை வீசுதல், அக்னி உபஸ்தானம் ஆகியவற்றைச் செய்யவும்.

अनुवाकः—३० यदेतद्वृकसो ।

சாலாவ்ருகம் என்பது நாய், ஓநாய், நரி இவை களுக்குப் பெயர். அவை எதிர்பட்டால் 'யதே தத்வ்ருகஸோ பூத்வா' என்று மந்திரம் சொல்லி, முன் போலவே கொள்ளி வீசுதல், உபஸ்தானம் ஆகியவற்றை செய்யவும்.

अनुवाकः—३१ यदीषितो ।

காட்டு ஆடு கத்தினுல் 'யதீஷிதோ' என்ற மந்திரம் சொல்லி, கொள்ளியை வீசி, முன் போலவே அக்னி உபஸ்தானம் செய்யவும்.

अनुवाकः—३२ दीर्घमुखि ।

தீர்க்கமுகி எனும் பெண் காக்கை அல்லது பெண் கழுதை சப்தமிட்டால், இம்மந்திரம் சொல்லி, கொள்ளி வீசி, முன்போலவே அக்னி உபஸ்தானம் செய்யவும்.

अनुवाकः—३३ इत्थादुलूक आपप्तत् ।

ஆந்தை கத்தினால் 'இத்தா துலூகா' என்ற மந்திரம சொல்லி கொள்ளியை வீசவும். அக்நி உபஸ்தானம் முன் போல் செய்யவும்.

अनुवाकः—३४ यदे तद्भूतानि ।

பேய் பிடித்த மனிதன் கத்தினால் 'யதேதத் பூதாநி' என்ற மந்திரத்தைச் சொல்லி கொள்ளியை வீசவும். அக்நி உபஸ்தானம் ஆகியவற்றை முன் போலவே செய்யவும்.

अनुवाकः—३५ प्रसार्य सक्थ्यौ ।

சகுனி எனும் பக்ஷி கத்தினால் 'ப்ரஸார்யக்த்யௌ' என்னும் மந்திரத்தைச் சொல்லி முன் போலவே கொள்ளி வீசுதல், அக்நி உபஸ்தானம் ஆகியவற்றைச் செய்யவும்.

अनुवाकः — ३६ अग्निनात्वा क्रिमे हन्मि ।

கர்ம பாத்திரத்தில் கிருமி இருந்தால் இந்த மந்திரம் பிராயச்சித்தமாகச் சொல்லப்படுகிறது. எல்லாவற்றிற்கும் ஸர்வ ப்ராயச்சித்தம் என்று சிலர் கூறுவர். இந்த மந்திரம் சக்திமிக்க மந்திரம். ஜபத்தினுல் வயிற்றுக்குள் இருக்கும் கிருமிகளை ஒழிக்கவல்லது.

अनुवाकः— ३७ आहरावद्य ।

சத்ருவுக்கு அபிசாரம் செய்ய எண்ணினுல் சிவப்பு நிறமுள்ள ஹவிஸ்ஸால், இந்த மந்திரத்தை சொல்லி ஹோமம் செய்ய வேண்டும்.

अनुवाकः— ३८ ब्रह्मणात्वा शपामि ।

சத்துருவுக்கு அபிசாரம் செய்ய மூன்று நாட்கள் ப்ரம்மசர்ய நியமத்துடன் இருந்து, சத்ருவை நோக்கி இந்த மந்திரத்தைக் கூற வேண்டும்.

अनुवाकः— ३९ उत्तुदशिम्पिजावरि ।

சத்ருவின் மாட்டுக் கொட்டிலில் இந்த மந்திரத்தைச் சொல்லி ஒஷதிகளை (விஷ ஒஷதிகளை) புதைக்க வேண்டும். அல்லது கொட்டிலின் நுழைவாயிலில் இருக்கும் பக்கவடங்களை இந்த மந்திரத்தைச் சொல்லி பிடுங்க வேண்டும்.

अनुवाक:—४० भूर्भुवस्सुवः ।

ஒரு சமயம் உத்காதாவினுல் செய்யப்படா விட்டால் அத்வர்யுவானவர் இந்த ஸ்தோமத்தை (ஸ்தோத்ரம்) கானத்துடன் சொல்லவும். வேறு ஸ்தோமமும் சொல்லப்படலாம். பூலோகம் முதலிய மூவ்வுலகங்களும் அபீஷ்டங்களைக் கொடுக்கட்டும். புவர்லோகத்திலிருந்து எல்லா அபிஷ்டங்களும் கிடைக்கட்டும். அதிகமான ஸௌக்யம் ஏற்படட்டும். ஸம்பாதிக்க வேண்டிய வஸ்துக்கள் கிடைத்துவிட்டன. ஹே தேவரே! எங்களுக்கு ஸ்வர்ணத்தை ஒத்த காந்தியைக் கொடு.

अनुवाक:—४१ पृथिवी समित् ।

இந்த அனுவாகத்தில் அவாந்தர தீக்ஷை விபரங்கள் கூறப்படுகின்றன. இதுவே சுக்ரிய வ்ரதம் எனப்படும். நான்கு அத்தி ஸமித்துக்கள் நெய்யில் நனைக்கப்பட்டு ஹோமம் செய்யப்படுகின்றன.

ப்ருத்வி தேவதை நன்கு ப்ரகாசிக்கிறுர். அந்த தேவதைக்கான ஸமித்தை அக்னி ஜ்வாலை செய்யட்டும். இந்த ஸமித்தை அக்னி ஜ்வலிக்கச் செய்கிறுர். இந்த ஸமித்தை நான் பிரகாசிக்கச் செய்கிறேன். என்னுல் ப்ரகாசிக்கச் செய்யப்பட்டு என்னை ஆயுள், எனது தேஜஸ், சரீர காந்தி, ஐச்வர்யம், புகழ், வேதாத்யயன ஸம்பத், அன்ன

ஸம்ருத்தி இவைகளை ப்ரகாசிக்கச் செய்யட்டும். வாயுவுடன் கூடிய அந்தரிக்ஷம், ஆதித்யனுடன் கூடிய தேவலோகம் இவைகளுக்கு இவ்விதமே கூறி ஸமித்துக்கள் வைக்கப்படுகின்றன. சத்ருக்களை அழிக்கவல்ல ப்ரஜாபதிக்கு இந்த ஸமித் ஜ்வலிக்கட்டும். என்னுடைய சத்ருக்களை அழிப்பதற்கு இந்த ஸமித் ஹோமம் செய்யப்படுகிறது. நியமங்களுக்கு அதிபதியான அக்னியே, வாயுவே, ஆதித்யரே, நான் என்னால் முடிந்த நியமங்களுடன் இருப்பேன். என்னுடைய வ்ரதம் பூர்ணமாக ஆகட்டும். இவ்விதமே அவாந்தர தீக்ஷையின் முடிவில் நான்கு ஸமித்துக்கள் வரிசைக் கிரமம் மாறி ஆதித்யனுடன் தேவலோகம், வாயுவுடன் அந்தரிக்ஷம், அக்னியுடன் ப்ருதிவி இவர்களுக்காக முதலில் சொல்லிய மந்திரத்துடன் ப்ரஜாபதிக்கும் ஸமித்துகள் வைக்கப்படுகின்றன. பிறகு, முன்பு சொல்லிய தேவதைகளை நோக்கி என்னால் இனி நியமங்களுடன் வ்ரதம் இருக்க முடியவில்லை. நான் விரதத்தை முடித்துக் கொள்கிறேன் என வேண்டப்படுகிறார்கள்.

अनुवाकः—४२ शन्नोवातः पवताम् ।

இந்த அநுவாகம் உத்தரசாந்தி எனப்படும். இந்த 37 மந்திரங்கள், ஒவ்வொரு நாளும் காலை மாலை இரு நேரங்களிலும் ப்ரவர்க்ய முடிவில் மதந்தி கும்பத்தைத் தொட்டுக்கொண்டு சொல்ல வேண்டும்.

1. ஆகாயத்திலிருக்கும் வாயு எங்களுக்கு சுகத்தை அளிப்பதாக வீசட்டும். ஸூரியன் உஷ்ணத்தைத் தரட்டும். பகலும் இரவும் சுகத்தைத் தரட்டும்.

2. உஷாதேவி சுகமான காலை நேரத்தையும், ஸூரியன் சுகமான உதயத்தையும் தரட்டும். ஹே ஸரஸ்வதியே! மிகுந்த கெடுதல்களை நீக்கி எங்களுக்கு மங்களத்தைத் தருவாயாக. உன் கடாக்ஷத்தினால் ஆகாயம் சுகத்தைத் தரட்டும்.

3. ஓ பூமியே! பசுவின் உருவமான இடை எனும் தேவதை வசிக்குமிடமாக உள்ளாய். உலகிலுள்ளோர் அனைவரும், நாங்களும் உன் தயவினால் வசிக்குமிடத்தை உடையவர்களாக இருப்போமாக. எங்கள் சத்ருக்கள் இருப்பிடமில்லாதவர்களாக ஆகட்டும்.

4. நிலையுடன் கூடிய பூமியே! எங்களை நிலையுள்ளவராக செய்.

5. ஓ வாயுவே! எங்களுடைய நோய்கள் நீங்கும்படியாக சுற்றிலும் சஞ்சாரம் செய். எங்கள் உடலிலிருக்கும் பாபங்களை சுத்தம் செய். நீர் அனைத்துலகிற்கும் வியாதியை நீக்கும் தேவர்களின் தூதராகச் செல்கிறீர்.

6. இவ்வுலகில் இருக்கும் ஸமுத்ர ப்ரதேசத்திலும், உள் நாட்டிலும் இருக்கும் வேகமுள்ள,

சாந்தமான இருவகைக் காற்றினுள் சாந்தமான வாயு எனக்கு சுகத்தையளிக்கட்டும் வேகமான வாயு என் மீதுள்ள பாபங்களைப் போக்கட்டும்.

7. ஏ வாயுவே! உன்னுடைய வீட்டில் மரணத்திலிருந்து காக்கும் அம்ருதம் உள்ளது. எங்களை ஜீவிக்கச் செய்ய சிறிது அம்ருதத்தைக் கொடுத்து எங்களுக்கு ஔஷதத்தையும் கொடு. அதனுல் எங்களுக்கு ப்ரகாசத்தை அளி.

8. இந்த வாயுவானது எங்கள் தேகத்தின் வியாதியைப் போக்குவதாகவும், மனத்திலிருக்கும் துக்கங்களைப் போக்குவதாகவும் இருக்கட்டும். எங்கள் ஆயுளை நீண்டகாலம் ஜீவிக்கும்படி விருத்தி செய்யட்டும்.

9. ஏ சூர்ய மண்டலமே! மிகுந்த ஐச்வர் யத்தை உடைய இந்த்ரனுடையவும், ஆதித்ய னுடையவும் இருப்பிடமாக இருக்கிருய். பசுக்கள், குதிரைகள் மற்றும் எங்களைச் சேர்ந்த வஸ்துக் களுடன் உம்மை அடைகிறேன்.

10. பூலோகம், புவர் லோகம், தேவலோகம், வாயு தேவன், ஆரோக்யத்தைத் தரும் தேவதை, பிளக்க முடியாத கடினமான கல், ப்ரஜாபதி ஸம்பந்தமான எல்லா மந்திரங்களுக்கும் ஆதார மான வேதத்தின் ஸ்வரூபமான, பரமாத்மாவை சரணமடைகிறேன்.

11. அந்தரிக்ஷம் (ஆகாயம்) என் பொருட்டு விஸ்த்தீரணமுள்ளதாக ஆகட்டும். கார்ஹபத்யம் முதலிய அக்நிகளும், மேரு முதலிய பர்வதங்களும் அதிகமான சுகத்துடன் இருக்கட்டும். ஆகாயத்தி லிருக்கும் வாயு எனக்கு க்ஷேமத்தை அளிப்பதாக வும், அதன் மூலம் என் மனதிற்கு க்ஷேமத்தையும் அளிக்கட்டும்.

12. ஏ ப்ராணன், அபாணன் என்ற தேவர் களே! என்னை ம்ருத்யுவிடமிருந்து காப்பாற்றுங் கள், ஒரு சமயத்திலும் என்னை விட்டு விலகி விடாதீர்கள்.

13. எனக்கு புத்தி கூர்மை, சந்ததி, சரீரத் தின் பிரகாசம் இவைகளை அக்நியும், இவற்றுடன் கண் முதலிய உறுப்புகளின் திறமையை இந்திர னும், இவற்றுடன் ப்ரகாசமுடைய தேஜஸ்ஸை சூரியனும் அளிக்கட்டும்.

14. ஏ அச்விநி தேவர்களே! மங்களத்தைத் தரவல்லவையும், ப்ரகாசத்தையுடைய நெய் முதலிய திரவியங்களுடன் கூடியவையும், அழி வற்றவையுமான நல் வாக்குகளால் எங்களைக் காக்கட்டும். இந்த கர்த்தாவை, மித்ரன், வருணன், அதிதி, ஸமுத்திரம், பூமி, தேவலோகம், இவர் களும் அனுக்ரஹிக்கட்டும்.

15. ப்ரஜாபதியின் சம்பந்தத்தால் காப்பாற்றப்படும். எப்பொழுதும் வ்ருத்தியுடன்

கூடியதும், சிநேகிதன் போல் ப்ரியமுள்ளதுமான எந்த யக்ஞம் எங்களை நோக்கித் திரும்பி வந்ததோ, அந்த யக்ஞம் ப்ரஜாபதியின் சேர்க்கையால் மிகுந்த வலிமையுள்ளதாக இருக்கிறது.

16. ஏ ப்ரவர்க்யமே! பரப்ரம்ம ரூபமானவரும் ஸந்தோஷத்தைத் தரவல்ல ஆயுள், அன்னம் இவற்றை அதிகமாக வ்ருத்தி செய்பவருமான எங்களை, சந்தோஷிப்பிக்கட்டும். எல்லா உபத்ரவங்களையும் நிவர்த்திக்க தேவையான ஐச்வர்யத்தை நிலைப்படுத்தட்டும்.

17. ஏ ப்ரஜாபதியே! கிழத்தன்மை அடையவர்களும், சிநேகிதர் போன்று ப்ரியமானவர்களுமான எங்களை, நூற்றுக்கணக்கான ரக்ஷணங்களாலும், எப்பொழுதும் சுபமானவைகளால் காப்பவராக இரும்.

18. அழகு மிக்க இறக்கைகளுடன் கூடிய பறவை உருவம் கொண்டவர்களும், அத்யயனம் செய்த வேதத்தை நிலைப்படுத்தும் புத்தி கூர்மையுடன் கூடிய ரிஷிகள் இந்திரனை அடைந்தனர். ஹே இந்திரனே! அஞ்ஞானம் என்ற இருளை அகற்றும். அறிவாகிய கண்களுக்குப் பார்வையைக் கொடும். அறியாமை என்கிற விலங்கின் கட்டுகளிலிருந்து விடுவியும் (என்றனர்).

19. ஜலாபிமானி தேவதைகள் எங்களுக்கு விருப்பமான பானமாக சுகத்தின் பொருட்டு

ஆகட்டும். எங்களுடைய ஸௌக்யத்திற்காகவும், கெடுதி ஏற்படாமலும் இருக்கும்படி எல்லாவிடங்களையும் நிறைந்த நீருள்ளதாக இருக்கட்டும்.

20. விரும்புகிறவர்களின் விருப்பத்தைத் தர வல்லவரும், மனிதர் வசிப்பதற்கு காரணமாயுள்ள ஜலாபிமானி தேவதைகளை (எங்களின்) பாபத்தைப் போக்கவல்ல ஔஷதத்தைத் தர வேண்டுகிறேன்.

21. ஜலம், ஔஷதம் என்ற இரு தேவதைகளும் எங்களிடம் மிக்க ப்ரியமுள்ளவர்களாகவும், எங்கள் சத்ருக்களிடம் ப்ரியமற்றவர்களாகவும் இருக்கட்டும்.

22. ஸ்னானம், பருகுதல், இவைகளினால் சுகத்தைத் தரவல்ல ஏ ஜல ஸமூஹமே! எங்களுக்கு உங்களின் பலத்தைத் தரவல்ல ஸாரத்தினால் நிலைப்படுத்துங்கள். அவ்விதமே அதிகமான தேஜஸ்ஸினாலும், தர்சன யோக்யத்தாலும் பரப்ரம்ம சாக்ஷாத்காரத்திற்கு உரியவர்களாக செய்யுங்கள்.

23. ஏ ஜலாபிமானி தேவதையே! எவ்வாறு அபிமானத்துடன் கூடிய தாயார் தன்னுடைய குழந்தைக்கு தன் பாலை அடைவிக்கிறாளோ, அவ்விதம் உங்களுடைய மங்களத்தைத் தரவல்ல, சுகத்தைத் தரவல்ல ரஸத்தை அடைவியுங்கள்.

24. ஏ ஜல தேவதைகளே! எந்த ஸாரத்தின் இருப்பினுல் நீங்கள் ப்ரியமானவர்களாக இருக்கிறீர்களோ, அந்த ஸாரத்தை அடைவதற்காக உங்களை அடைகிருேம். எங்களைச் சந்ததி உள்ளவர்களாகச் செய்வீர்களாக.

25. எந்த இந்த பூதேவி, எல்லா உபத்ரவங்களையும் நிவர்த்திப்பவளாகவும், அக்நியுடன் கூடி சாந்தமானவளுமாக இருக்கிருளோ அவ்விதமான அமைதியான பூதேவி என் துக்கங்களைப் போக்கட்டும். அமைதியைச் செய்யட்டும்.

26. & 27. வாயுவுடன் கூடிய அந்தரிக்ஷம், ஸூரியனுடன் கூடிய தேவலோகம் இவைகளும் என் துக்கங்களைப் போக்கி, அமைதியைத் தரட்டும்.

28. பூதேவி, அந்தரிக்ஷம், தேவலோகம், திக்குகள், இடைப்பட்ட திக்குகள் அக்நி, வாயு, ஸூரியன், சந்திரன், நக்ஷத்ரங்கள், ஜல ஸமூஹங்கள், ஓஷதிகள் (செடி, கொடிகள்) மரங்கள், பசுக்கள் (யாகத்திற்கு உபயோகமான) ஆடுகள், குதிரைகள், பரமாத்மா, வேதங்கள், வேதங்களை அறிந்தவர்கள் முதலியன, இன்னல்களை அகற்றி அமைதியளிக்கும் தேவதைகள், அமைதியின் அபிமானி தேவதைகள் எல்லா உபத்ரவங்களையும் நீக்கி அமைதியைத் தரட்டும்.

29. யஜமானனுகிய (யக்ஞம் செய்பவர்) எல்லா கெடுதிகளையும் நிவர்த்திக்கக் கூடிய முன்னுல் கூறப்பட்ட சாந்தி தேவதை, என்னுடன், என்னைச் சேர்ந்த மனிதர்கள், என்னுடையதான கால்நடைகள் இவைகளுக்கு அமைதியைத் தரட்டும். சாந்தி தேவதை எங்களுடைய இடையூறுகளைப் போக்கி அமைதியை ஏற்படுத்தட்டும்.

30. ஶ்ரீதேவி, ஹ்ரீ தேவி, தைர்யம், தபஸ், புத்தி கூர்மை, நிலையான தனிமை, சிரத்தை, உண்மை, நேர்மை ஆகியவற்றின் அபிமானி தேவர்கள் என்னுடன் இருக்கட்டும். முன் சொல்லிய தேவர்கள் என்னை விட்டு விலகவே வேண்டாம்.

31. ஆயுள் முதலிய குணங்களுடன் கூடிய சந்திரனுல் நீண்ட ஆயுள், வியாதி முதலியன இல்லாத தன்மை, ஒஷதிகளின் ஸாரம், மழை ஜலத்தின் ஸாரம் இவைகளினுல் நோயற்ற தன்மையை அடைகிறேன்.

32. கிழக்கு திக்கில் உதயமாகும் ஒளிமயமானதும், தேவர்களுக்கு நன்மைச் செய்வதும், கண் பார்வையைத் தருவதுமான ஸூர்ய மண்டலத்தை நூறு ஆண்டுகள் பார்ப்போமாக. நூருண்டு உயிருள்ளவராய் இருப்போமாக. நூருண்டுகள் ஸம்ருத்தியுடன் இருப்போமாக. சந்தோஷமாக இருப்போமாக. நிலையாக இருப்போ

மாக. வேதம் சாஸ்திரங்களின் உட்பொருளை குருவினிடமிருந்து அறிவோமாக. சீடர்களுக்கு நன்ருக உட்பொருளை உணர்த்துவோமாக. சத்ருக்களால் ஜயிக்கப்படாதவர்களாக நீண்ட காலம் ஸூரியனைப் பார்ப்போமாக.

33. கிழக்கு திக்கில் ஸமுத்ரத்தின் ஜலத்தின் நடுவிலிருந்து மிகவும் ப்ரகாசத்துடன் உதயமாகிறவரும், அபீஷ்டங்களைத் தருபவரும், சிவந்த நிறமான கண்கள் உள்ளவரும், எல்லாம் அறிந்தவருமான ஸூரியன் என்னை சுத்தமானவனுக ஆக்கட்டும்.

34. ஏ வேதமே! நீ பரமாத்ம ஸ்வருபத்தை கேட்கும்படி செய்கிருய். என்னுடைய காதுகளில் வேதத்தைச் சொல்லும்படி செய்வாயாக. ஏ மனமே! வேதம் நிலையாக இருக்கும்படியான இடமாக இருக்கிருய். இந்த பூமி, மிகப் பெரிய அந்தரிக்ஷம். தேவர்களுடன் கூடிய தேவலோகம் இவைகளை வேதத்தின் உட்பொருளான பரப்ரம்மா தரிக்கிருர். பரப்ரம்மத்தைத் தெரிவிக்கும் வேத வாக்ய ததை நான் அறிகிறேன். வேதம், பரம் பொருள் இரண்டையும் மனதில் நிலைப்படுத்துகிறேன். வேதமே என்னை விட்டு விலகி விடாதே.

35. மனதில் நிலைப்படுத்தும் சக்தி, மனதில் பெற்றுக் கொள்ளும் சக்தி இவை இரண்டும் முன் கற்றவை, கற்கப் போகின்றவை, இவைகளைப்

பெற என்னிடம் ப்ரவேசிக்கட்டும். இவைகளின் ஸித்தியானது கிடைக்கட்டும்.

36. ஹே குதிரையுடன் கூடிய இந்திரனே! எங்கள் துதிகளால் விருத்தியை அடையும் நீர், எங்கள் கர்மாக்களில் உள்ள குறைபாடுகளை நீக்கி எங்களுடைய கர்மாக்களை விருத்தி செய்யும். எப்படி துதிப்பவர்களுக்கு பெரிய மேகங்களை உடைத்து மழையைத் தருகிறாயோ, அவ்விதம் எங்களை அதிகமான ஐச்வர்யங்களை அடைபவர்களாகச் செய்யுங்கள்.

37. பரமாத்ம ரூபத்தைத் தெரிவிக்கும் மந்திரங்களைக் கூறினோம். இந்த மந்திரங்கள் எங்களை விட்டு விலக வேண்டாம். ஒருபொழுதும் விலக வேண்டாம்.

ஹே ப்ரணவத்தினால் அறியக் கூடிய பரம் பொருளே!

ஜ்வரம், துலை நோய் போன்ற சரீர சம்பந்தமான துக்கங்கள் நீங்கி அமைதி ஏற்படட்டும்.

திருடர், புலி முதலிய பூலோக ஸம்பந்தமான கேடுகள் நீங்கி அமைதி ஏற்படட்டும்.

யக்ஷர்கள், ராக்ஷஸர்கள் முதலிய தைவீகமான கேடுகள் நீங்கி அமைதி ஏற்படட்டும்.

தைத்ரீயாரண்யகம்

ஐந்தாவது ப்ரச்னம்

ப்ரவர்க்ய ப்ராம்மணம்

अनुवाकः—१ देवा वै सत्रमासत ।

முன்ஞெரு காலத்தில், மிகுந்த புகழை அடைய வேண்டுமென்று விரும்பிய தேவர்கள், சத்ரம் என்னும் யாகத்தைச் செய்தால் புகழை அடையலாம் என்று எண்ணினர். ஆனல் அந்த யாகம் ஒருவரால் செய்யக் கூடியது அல்ல என்பதால், அனைவரும் சேர்ந்து செய்யலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

அவர்கள் யாகம் செய்வதற்கு வசதியாக குருக்ஷேத்திரத்தை தேர்வு செய்தனர். இந்த குருக்ஷேத்திரம் என்ற ஊர் தெற்கில் உள்ள காண்டவம் என்ற இடத்திற்கும், வடக்கில் உள்ள தூர்க்கனம் என்ற இடத்திற்கும் மத்தியில் இருக்கிறது. இந்த குருக்ஷேத்திரமே 'வேதியாக'-யாக குண்டமாக கருதப்படுகிறது. யாக குண்டத்திற்கு வடபுறத்தில், (மரு எனும் பாலைவனம். ஜலம் இல்லாத பூமி) மண், புல், இலை ஆகிய

வற்றை போடுகின்ற உத்கரம் என்ற இடம் இருந்தது.

அங்கு விஷ்ணு எனும் யக்ஞ அபிமானி தேவதை யஜமானனாக தீக்ஷை ஏற்று புகழ் அடைந்திருந்தார். அந்த விஷ்ணு, தேவர்களுக்கு புகழைத் தர விருப்பமில்லாமல் அவ்விடத்தி லிருந்து நகர்ந்து விட்டார். ஆகவே, தேவர்கள் அனைவரும் புகழைப் பறித்துக்கொள்ள விரும்பி, அவரைப் பின் தொடர்ந்தனர்.

அந்த சமயத்தில் யக்ஞ ப்ரபாவத்தால் விஷ்ணுவின் கையில் வில்லும், அம்புகளும் வந்தன. அச்சமயம் யக்ஞ புருஷராகிய விஷ்ணு சிரித்தார். விஷ்ணுவிடமிருந்து தேஜஸ் பிரிந்தது. அவை சாமை என்ற பயிரையடைந்தன. ஆகை யால் யக்ஞ தீக்ஷிதர் தேஜஸ் போகாமல் இருக்க வேண்டுமானால் வாயை மூடிக் கொண்டு சிரிக்க வேண்டும்.

யக்ஞ புருஷன் நாணேற்றிய வில்லை ஒருபுறம் சிரஸ்ஸைத் தாங்கும்படி மோவாய் என்னுமிடத்தி லும், மறுபுறத்தை பூமியிலும் வைத்துக்கொண்டு கர்வமாக நின்றிருந்தார். அது சமயம் கறையான் கள் எனப்படும் சிறு ஊர்வனங்கள், நாங்கள் பூமியைத் தோண்டும் இடத்தில் ஜலம் ஏற்பட வேண்டும் என்று தேவர்களிடம் வரம் பெற்று, நாணைக் கடித்து அறுத்தன. வில்லின் ஒருபுறம் விடுபட்டு யக்ஞ புருஷனின் சிரஸ்ஸை அறுத்தது.

அறுபட்ட சிரஸ் ஆகாயத்திற்கும் பூமிக்கும் சென்றது. அதனால் ப்ரவர்க்யம் என்றும் (ஞா) க்ராம் என்றும் சப்தித்துக் கொண்டதால் (ஏஸ்) கர்ம என்றும் ,மிகுந்த வேகத்துடன் சென்றதால் மகாவீரம் என்றும் பெயர் பெற்றது. பூமியிலிருந்து அந்த சிரஸ்ஸை தேவர்கள் எடுத்ததால், நன்கு ப்ரகாசிக்கும் சிரஸ் ஸம்ராட் என்று கூறப்பட்டது. யக்ஞ புருஷனின் உடலை தேவர்கள் மூன்றாக எடுத்துக் கொண்டனர்.

அவை மூன்று ஸவனங்களாக, அக்னி ப்ராதஸ் ஸவனத்தையும், இந்திரன் மாத்யந்தின ஸவனத்தையும் விச்வேதேவர்கள் மூன்றாவது ஸவனத்தையும் அடைந்தனர். சிரஸ்ஸில்லாத யக்ஞ புருஷனால் அவர்களுக்கு யாகத்தின் பலன் கிடைக்கவில்லை. தேவர்கள், தேவ வைத்யர்களிடம் யக்ஞ புருஷனின் சரீரத்தையும் சிரஸ்ஸையும் ஒன்று சேர்க்குமாறு கேட்டுக் கொண்டனர். ப்ரதியாக ஸோம யாகத்தில் உங்களுக்கு ஸமமாக எங்களுக்கு, ஆச்வின க்ரஹங்கள் தேவையென்று தெரிவித்தனர். தேவர்களும், அவர்களது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, ஆச்வின க்ரஹங்களை அளித்தனர். ஆச்வின க்ரஹங்களை பெற்றுக் கொண்டு, அச்வினீ தேவர்கள் சிகித்ஸை செய்து, யக்ஞ புருஷனின் சிரஸ்ஸை சரீரத்துடன் இணைத்தனர். ப்ரவர்க்யம் எனக் கூறப்படும் இந்த க்ரியையினால் யக்ஞபுருஷனின் சரீரமும் சிரஸ்ஸும் இணைக்கப்

பட்டதால், ப்ரவர்க்யம் என்ற சிரஸ்ஸுடன் கூடிய இந்த யக்ஞத்தை நடத்திய தேவர்கள் அபேக்ஷித்த காமனைகளையும் ஸ்வர்க்கத்தையும் அடைந்தனர்.

ப்ரவர்க்யம் என்னும் கர்மாவை செய்ததால், சிரஸ்ஸுடன் கூடிய யக்ஞத்திஞல் விரும்பிய பலன்களை யஜமானன் அடைகிறுன். அச்விநீ தேவர்களால் ஒன்று சேர்க்கப்பட்ட காரணத்திஞல் ப்ரவர்க்யம் எனும் கர்மா அச்விநீ தேவர்களிடம் உற்பத்தியானவை.

अनुवाकः—२ सावित्रं जुहोति ।

அநேகம் மந்திரங்களுடன் கூடிய புரோநுவாக்யை (மந்திரத்தைச் சொல்ல ஹோம த்ரவ்யத்தைக் கையில் எடுத்துக் கொள்வது) யாஜ்யைகளால் விலக்கப்பட்டவைகளாக வேறிடம் சென்றன. தேவர்களே! பாகமில்லாதவர்களாகிய சந்தஸ்ஸாகிற நாங்கள் உங்களுடைய ஹவிர்பாகங்களை உரியவர்களுக்கு எடுத்துச் செல்ல மாட்டோம் என்றன. இப்பொழுது தேவர்கள் நன்கு யோசித்து ஹோம காலத்தில் நான்கு முறை நெய் சேர்த்து ஹோமம் செய்வது சந்தஸ் தேவதைகளுக்கு பிரியமானது என்று, அவர்களுக்கு பாகம் கொடுத்தனர். முதல் முறை நெய் எடுப்பது புரோநுவாக்கையின் அபிமானி தேவதைக்கும், இரண்டாவது முறை நெய் எடுப்பது யாக்ஞயையின் அபிமானி

தேவதைக்கும், மூன்றாவது முறை நெய் எடுப்பது ஜகதீ சந்தஸ் அபிமானி தேவதைக்கும், நான்காவது முறை நெய் எடுப்பது அநுஷ்டுப் சந்தஸ்ஸின் அபிமானி தேவதைக்கும் ப்ரீதிகரம். ஆகையினால் சதுர்க்ருஹீத ஹோமத்தினால் சந்தஸ்ஸின் தேவர்கள் ப்ரீதியை அடைந்து ஹவிர்பாகத்தை எடுத்துச் செல்கின்றனர்.

ப்ரவர்க்யம் செய்வது இரு முறைகள் உண்டு. 1. ஸோமயாக ஸங்கல்பம் செய்தபின் தீக்ஷணீயேஷ்டி செய்வதற்கு முன்பாக, ப்ரவர்க்ய ஸாதனம் மகாவீரம் (பெரிய மண் பாண்டம்) ஏற்படுத்துதல் என்பது ஒருமுறை. 2. தீக்ஷை முடிந்து ப்ரவர்க்யம் செய்யும் ஸமயத்திலேயே ஸாதனங்களைச் செய்வது மறு முறை.

அந்தர்யாமியான தேவதையின் உத்தரவினால் அச்விநீ தேவர்கள் ஸாந்நித்யமுள்ள புஜங்களாலும், பூஷா எனும் தேவதையின் ஸாந்நித்யமுள்ள (முன்) கைகளாலும் உன்னை எடுத்துக் கொள்கிறேன் என்று அத்வர்யு கருங்காலி மரத்தால் செய்யப்பட்ட கூரான முனையையுடைய அப்ரி என்ற மண் தோண்டும் மர ஸாதனத்தை எடுத்துக் கொள்கிறார். இந்த மந்திரத்தை விவாஹத்தில் கன்யகையைப் பெற்றுக் கொள்ளும் பொழுதும், தானங்களைப் பெறும் பொழுதும் கூறப்படுகிறது. கைகளுக்கு தெய்வ ஸாந்நித்யத்தை விளக்குகிறது.

காயத்ரி அபிமானி தேவதை யக்ஞத்திற்கான ஸோமலதையைக் கொண்டு வந்த கர்வத்தினால் மற்ற சந்தஸ்களை ஏளனம் செய்தது. அப்பொழுது வஷட்காரத்தின் அபிமானி தேவன் கோபம் கொண்டு காயத்ரியின் முன்பக்கம் சென்று அதன் சிரஸ்ஸை நறுக்கியது. நறுக்கப்பட்ட சிரஸ்ஸி லிருந்து உண்டான ரஸங்கள் இரண்டாகப் பிரிந்து, ஒன்று பூமியையும், மற்றொன்று பிராணிகளையும் அடைந்தது. பூமியை அடைந்த பாகம் கருங்காலி மரமாக ஆனது. பிராணிகளை அடைந்த பாகம் ஆட்டில் பிரவேசித்தது. ஆகை யினால் அப்ரி என்பது கருங்காலி மரத்தினால் இருக்க வேண்டும். சந்தஸ் ஸம்பந்தமான ரஸத் தினால் யக்ஞத்தின் சிரஸ் ப்ரவர்க்யம் எனும் ரூபத்தை அடைந்தது. காயத்திரியீல், கருங்கா லிக்கு மாற்றாக மூன்று முறைகள் கூறப்படுகின் றன. அத்தி மரத்தின் பழம் அன்னத்திற்கு ஸஹா யாமாக சாப்பிடக் கூடியதால் 'ஊர்க்' என்று சொல்லப்படுகிறது. ஒரு ஸமயம் அக்னி, தேவர் களிடமிருந்து விலகி மூங்கிலில் ப்ரவேசித்தார் என்பதால் மூங்கிலிற்கு காந்தி உருவம். அக்நி யினால் சிருஷ்டிக்கப்பட்ட அக்னியின் பிரகாசம் விகங்கத வ்ருக்ஷத்தை அடைந்தது. (ச்ருஷ்டிக்கப் பட்டதால் ப்ரம்மாவின் முன்னால் சென்று ப்ரவர்க் யத்தை அடைகிறார்.) தேவர்கள் யக்ஞத்தை நடத்தி வைக்கின்றனர். மண் தோண்டி எடுக்கப்

படும் இடத்திற்கு வடக்குபுறம் கழுத்து புறமும், கிழக்கிலும் ரோமங்கள் மேல்புறமும் இருக்கும்படி வைக்கப்பட்ட க்ருஷ்ணாஜினத்தை (மான் தோல்) விரித்து அதில் தோண்டப்பட்ட மண் மூன்று முறை எடுத்து வைக்கப்படுகிறது.

இது பூலோகம், புவர்லோகம், ஸ்வர்க்கலோகம் இவைகளின் ஸம்பந்தத்தைக் குறிக்கிறது. பூமி மண் குழி தோண்டியதால் ஏற்பட்ட வேதனை யையும் ஸஹித்துக் கொண்டு, யக்ஞம் செய் பவரின் நன்மைக்காக கருணையுடன் மண் தரு கிறது. அதனால் தோண்டப்பட்ட மண் முழுவதை யும் எடுத்து விடவேண்டும். வேறு இடத்தி லிருந்தும் கொண்டு வரக்கூடாது மந்திரங்கள் சொல்லப்படும் வரிசையிலேயே மற்ற சாதனங் களும் எடுக்கப்பட வேண்டும். பன்றியின் முகத் தினால் தோண்டப்படும் மண் வராஹ விஹதம் எனப்படுகிறது.

பூமியானது ஒரு ஸமயம் ஜீவ ப்ராணிகள் எதுவும் இல்லாமல் முழுவதும் ஜல ரூபமாக இருந்தது. ப்ரம்மா தன்னுடைய ச்ருஷ்டி நிமித்த மாகப் பார்த்தபோது, எங்கும் ஜலரூபமாக இருப் பதைப் பார்த்தார். அந்த ஜலத்தின் நடுவில் ஒரு தாமரை இலை மிதப்பதைப் பார்த்து அந்தத் தாமரை இலைக்கு கீழே ஏதாவது ஆதாரம் இருக்க வேண்டும் என நினைத்து, தான் பன்றி உருவத் தில் தாமரை இலையின் தண்டு சேறு போன்ற

பிரதேசத்தில் இருப்பதைக் கண்டு, அதைத் (மண்ணை) தன் முகத்தாலும் கோரைப் பற்களாலும் பறித்து எடுத்தார். வராஹ விஹ்ருதமான மண்ணை எடுப்பதால் பூமி முழுவதின் மண் எடுக்கப்பட்டதாக ஆகிறது.

புற்றை ஏற்படுத்தும் சிறு கிருமிகளின் பெயர் வம்ரி. பூமியில் இருக்கும் ஸாரமான த்ரவத்தால் வம்ரிகள் (கறையான்கள்) மண்ணுடன் கலந்து புற்றை ஏற்படுத்துகின்றன. இவை புரைபுரையாக காதின் உட்புறம் போன்று இருக்கும். ஆகையினுல் கறையான்புற்று பூமியின் காது எனப்படுகிறது. இந்தக் கறையான்கள் தேவர்களுக்கு உபகாரமாக, யக்ஞபுருஷனின் சிரஸ்ஸை நறுக்க உதவியதையும் தேவர்களிடம் வரம் பெற்றதும் முன்பே கூறப்பட்டது. ஆகையினுல் கறையான் மண்ணுக்கு ப்ரவர்க்ய ஸம்பந்தம் ஏற்படுகிறது.

ஒரு ஸமயம் வ்ருத்ரன் என்ற அசுரனைக் கொல்ல இந்த்ரன் வஜ்ராயுதத்தை வீசினுன். ஓடிக்கொண்டிருக்கும் வ்ருத்ரனை வஜ்ராயுதத்தால் கொல்ல முடியவில்லை. பூதீகம் எனப்படும் ஓஷதிகளால் வ்ருத்ரன் ஓட்டத்தில் தடை ஏற்பட்டு வஜ்ராயுதத்தால் கொல்லப்பட்டான். சந்தோஷமடைந்த இந்த்ரனுல் என்னுடைய பராக்ரமத்தைக் காப்பாற்றியதால் நீங்கள் (ஓஷதிகள்) காப்பாற்றுபவர் என்ற பெயரை அடைகிறீர்கள். ஆகையினுல்

ஓஷதிகளின் சேர்க்கை யாகத்திற்கு பாதுகாப்பை அளிக்கின்றன. இரண்டு விதமான தோல்கள் (ஆட்டுத்தோல் - மான்தோல்) அக்னி ஸம்பந்தத்தினால் அக்னிஜா எனப்படுகின்றன.

யக்ஞமானது ஐந்து ஹவிஸ்களுடன் கூடியதால் பாங்க்தம் எனப்படுகிறது. அவை முறையே வறுத்த யவை, நெய் கலந்த சத்து மாவு, நெற்பொரி, புரோடாசம் எனும் சிறிது வறுத்த மாவு, நீர் பிழியப்பட்ட தயிர், (आमिक्षा) அவ்விதமே ப்ரவர்க்யமானது, மண் பன்றியால் தோண்டப்பட்ட மண், புற்று மண், பூதிகா என்ற ஓஷதி, அஜினம் ஆட்டுத்தோல், க்ருஷ்ணாஜினம் ஆகிய ஐந்து வஸ்துக்களுடன் கூடியது (இவ்விதமே மதுபர்க்கத்தில் சேர்க்கப்படும், தயிர், தேன், நெய், வறுத்த யவை ஸத்துமாவு இவையும் பாங்க்தம் எனப்படும்.)

பசு போன்ற நாட்டுப் பிராணிகளின் தோல் உபயோகிப்பதால் அவைகளை ரோகம் முதலியவற்றால் வருத்தப்பட நேரிடும், மான் காட்டிலிருக்கும் தன்மையினால் காட்டுப் பிராணிகளையே மகாவீரத்தின் ஸந்தாபத்தில் சேர்க்கிறார்கள். இரண்டு வகை பிராணிகளின் உற்பத்தி ஸமமாக இருந்தாலும் ஜனங்கள் நாட்டுப் பிராணிகளிடம் காட்டும் பரிவை காட்டுப் பிராணிகளிடம் காட்டுவதில்லை. மான் தோலின் ரோமம் இருக்கும் பாகம் சுத்தமானது. யக்ஞத்தில் உபயோகமானது.

உஷ்ணமான ஜலம் நிரம்பிய (மதந்தி) பாத்திரத்தைத் தொடுவதனால் யஜமானனுக்கு காந்தி ஏற்படுகிறது. அக்நி, ஆடு இரண்டும் ப்ரஜாபதியின் முகத்திலுண்டானவர்கள். இருவரும் ஸஹோதரர்கள். ஆகையினால் ப்ரியமுள்ள ஆட்டுத் தோலினால் யஜமானனுக்கு காந்தி ஏற்படுகிறது.

அनुवाकः—३ परिश्रिते करोति ।

ப்ரவர்க்ய பாத்திரத்தின் மீது நமது மூச்சுக் காற்று படக்கூடாது. ப்ரவர்க்யத்திற்கும் ஸூரியனுக்கும் மத்தியில் எதுவும் இருக்கக் கூடாது. இருந்தால் குஷ்டரோகியாவான். மண் பானை செய்வதற்கு விறகுக்கு பதில் மூங்கிலை உபயோகிக்க வேண்டும். தேவர்களிடமிருந்து ஒரு ஸமயம் பிரிந்து அக்நிமூங்கிலில் வசித்ததால் மூங்கிலுக்கு அக்நி ஸம்பந்தம் ஏற்பட்டு தேஜஸின் சேர்க்கை ஏற்பட்டது.

மூங்கிலுக்கு அக்நி ஸம்பந்தம் இருப்பதால் அக்நியை ஜ்வாலை செய்யும் பொழுது மூங்கில் குழாயாலேயே ஜ்வாலை செய்ய வேண்டும். பித்தளை முதலிய குழாய்களாலும் விசிறி முதலிய சாதனங்களாலும் ஜ்வாலை செய்வது உசிதமில்லை,

யக்ஞ புருஷனின் சிரஸ்ஸின் பரிமாணம் ஒரு சாண் அளவே. ப்ரஜாபதியின் சிரஸ்ஸும் ஒரு

சாண் அளவாகவே ஸாமவேதம் கூறுகிறது. யக்ஞாங்கமான ஐந்த்ரவாயவம் முதலிய க்ரஹ பாத்ரங்களும் ஒரு சாண் அளவேயாகும். மனிதனுடைய சரீரத்தின் இந்திரியங்களை ஆட்டுவிக்கும் சக்தி ஒரு சாண் அளவுள்ள முகத்திலேயே இருக்கிறது. (எண்சாண் உடலுக்கு சிரஸே ப்ரதானம்)

ஸூர்யன் குதிரை உருவானவர். ப்ரஜாபதியின் கண்களிலிருந்து குதிரை உண்டாயிற்று. குதிரையின் சாணத்தைப் புகையூட்டுவதால் மகாவீரம் ப்ரஜாபதியிடம் பிறப்புள்ளதாகவும் சந்தஸ்களின் சேர்க்கையுள்ளதாகவும் ஆகிறது.

अनुवाकः—४ ब्रह्मन् प्रचरिष्यामः ।

இந்தக் கர்மா செய்யும்பொழுது ப்ரம்மா என்பவர் ப்ரஹஸ்பதி ஸ்தானத்தில் இருக்கிறார். அவரிடம் தெரிவித்துச் செய்வதனால் கர்மாவில் குறைபாடுகள் முதலிய தோஷங்கள் எற்படாது. இவ்விதமான தோஷங்கள் ஏற்படாமல் இருப்பதற்காகவே, நமது வீடுகளில் செய்யப்படும் ஹோமங்களில் ப்ரம்மா என்று ஒருவரை வரணம் (நியமித்தல்) செய்கிறோம். மகாவீரம் மதந்தி ஜலத்தால் ப்ரோக்ஷிக்கப் படுகிறது. நியமம், யாகம், தேஜஸ் இவை ப்ரோக்ஷணத்திற்கு தேவதைகள். இவைகளால் ப்ரோக்ஷண கர்மா நிறைவையடைகிறது. மூன்று அக்நிகள் (ஆஹவநீயம், கார்ஹபத்யம், தக்ஷிணாக்நி) மூன்று

ஸவனங்கள் இவைகள் ஜலத்தை மூன்று முறைப் ப்ரோக்ஷிப்பதால் ஸித்தியாகின்றன. ஆகையினால் மூன்று முறைகள் ப்ரோக்ஷிக்க வேண்டும்.

இம்மந்திரங்கள் (அநுவானம்) நடுவில் மூச்சை நிறுத்தாமல் சொல்லவேண்டும். ஒரு ருக்கைச் சொல்லி மூச்சை நன்றாக விட்டு அடுத்த ருக்கைச் சொல்லவேண்டும். நடுவில் வேறு பேச்சு பேசக் கூடாது. இதனால் மந்திரத்தின் துடர்ச்சியும், யஜமானரின் ஆயுள், அன்ன ஸம்ருத்தி இவை துடர்ச்சியாகவும் தடைபடாமலும் இருக்கும். ராக்ஷஸ பாதை ஏற்படாது. [ஆகையினாலேயே நாம் மந்திரங்களைக் கூறும் பொழுது நடுவில் வேறு பேச்சுகள் பேசக் கூடாது.]

ஏழு ஹோமங்கள் சொல்லப்படுகின்றன.

சிரஸ்ஸில் ஏழு த்வாரங்கள் ('நவவை புருஷே ப்ராணா:' மனிதன் உடலில் ஒன்பது த்வாரங்கள் உள்ளன) அவற்றுள் ஏழு த்வாரங்கள் சிரஸ்ஸில் உள்ளன (இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரு நாசித்துவாரங்கள், ஒரு வாய் ஆக 7 த்வாரங்கள்) இவை ஏழு ப்ராணன்கள். இவற்றிற்கு ஹோமங்கள் தர்சபூர்ணமாஸத்தில் உள்ள ப்ரம்மா, ஹோதா, அத்வர்யு, ஆக்னீத்ரர் முதலிய ரித்விக்குகள் எவர்களோ, அவர்கள் வரும் ப்ரவர்க்யத்திலும் உண்டு. ஏ பூமியே! மனிதர் அனைவரும்

உன் புத்திரர்கள். பூமியில் உண்டான எல்லா பிராணி வர்க்கங்களும் பூமியின் புத்ரர்கள் (Sons of the soil) என்று மந்திரம் கூறுகிறது. யக்ஞத் தில் சிரஸ்ஸாக இருக்கும் ப்ரவர்க்யம் ஸூரிய னின் ஸ்தானமாக இருக்கிறது. தேவதைகளாக எண்ணப்படும் தணல்கள் ஸூரியனின் கிரணங் கள் போன்றவை. ப்ரவர்க்யத்தை ஒத்த அரசன், தணல்கள் போன்ற குடிமக்களால் சூழப்பட்டது போலும், கிராமத்து நாட்டாண்மைக்காரன் சுற்றி இருக்கும் பரி ஜனங்கள், சுற்றத்தார்கள் இவர் களுடன் சூழப்பட்டிருப்பது போல மகாவீரம் ப்ரகாசிக்கிறது.

இங்கு பரிதி எனப்படும் ஸமித்துக்கள் வைக்கப்படுகின்றன. ப்ரஜாபதியினுல் விடப்பட்டு ஓடிக் கொண்டிருக்கும் தேஜஸ் விகங்கதம் என்ற மரத்தில் ப்ரவேசித்தது. அதனுல் இங்கு விகங்கத மர பரிதிகள் வைக்கப்படுகின்றன. இங்கு 12 பரிதிகள் வைக்கப்படுகின்றன. 13வது பரிதியும் வைக்கப்படுகிறது. இது சில வருஷங்களில் ஏற்படும் அதிமாஸம் என்ற 13வது மாதத்தைக் குறிக்கின்றது. (விகங்கதம் என்பது நெரு என்றும் சிலர் முருங்கை, நரிஇலந்தை என்றும் சிலர் கூறு கிறுர்கள்

மகாவீரம் (ப்ரவர்க்ய பாத்ரம்) சிவப்பு, வெளுப்பு, இருட்டுமயம், ஸூரியன் ருத்ரன் முதலிய பல வர்ணங்கள், பலவித ரூபங்களில்

துதிக்கப்படுகிறது. மும்முறை மகாவீரத்தை வலம் வருகிறார்கள். மும்முறை யாகம் (ப்ராதஸ் ஸவனம், மாத்யந்தின ஸவனம், ஸாயம்ஸவனம்) செய்ததாக ஆகிறது. ரக்ஷஸ்பாதை நிவர்த்தி யாகிறது. மறுபடி மும்முறை வலம் வருவதனால் ஆறு ருதுக்களின் ஸம்பந்தம் ஏற்படுகிறது. மகா வீரத்தைத் தாண்டிச் செல்வதால் தோல் வியாதி உண்டாகும். மூன்று ப்ரதக்ஷிணங்களுக்குப் பதிலாக நான்காவது முறை ப்ரதக்ஷிணம் செய் தால் தோல் வியாதியை அடைகிறான். இது வெறும் வார்த்தை மட்டுமல்ல. ஒரு அரசன் சாஸ்த்ரார்த்தங்களை உபேக்ஷிக்கும் ரித்விக்களை வைத்துக்கொண்டு ஒரு சமயம் ப்ரவர்க்யத்தை ஆக்ரமணம் செய்தான். அந்த அபராதத்தினால் குஷ்டரோகத்தை அடைந்தான். ஆகையினால்தான் சரீரத்தைக் காத்துக் கொள்ளவாவது நான்காவது முறை வலம் வரக்கூடாது.

எவ்வித கர்மாக்களையும் நம் இஷ்டப்படி அதிகமாகவோ, மாறுபட்டோ செய்வதால் அதிக மான பயனையடையலாம் என நினைப்பது வீண். அதிக பலனுக்குப் பதிலாக அதிக கெடுதல்கள் ஸம்பவிக்கும் என உணர்த்தப்படுகிறது. எல்லா கர்மாக்களையும் சாஸ்திர முறைகளை அறிந்து அவ்விதமே செய்ய வேண்டும்.

अनुवाकः—५ अग्निष्टवा वसुभिः पुरस्तात् ।

ஏ ப்ரவர்க்யமே! அக்நியும் பசுக்களும் கிழக்கு திக்கில் காயத்ரி சந்தஸ்ஸாலும், இந்த்ரனும், ருத்ரர்களும் தெற்கு திக்கில் த்ரிஷ்டுப் சந்தஸ்ஸாலும், வருணனும் ஆதித்யர்களும் மேற்கு திக்கில் ஜகதி சந்தஸ்ஸாலும், உதானன் எனும் வாயு மருத்துக்களுடன் வடக்கு திக்கில் அனுஷ்டுப் சந்தஸ்ஸாலும் ப்ரஹஸ்பதி எல்லா தேவர்களுடன் ஆகாயத்தில் பங்க்தி சந்தஸ்ஸாலும் உன்னை ப்ரகாசிக்கச் செய்கின்றனர். நீயும் ப்ரகாசிப்பாயாக. தேவர்களுக்கு நடுவில் ப்ரகாசிக்கும் நீர் என்னையும் மனிதர் மத்தியில் ப்ரகாசிக்கச் செய்யும். நீர் எவ்விதம் தேவர்களுக்கு நடுவில், நீண்ட ஆயுள், தேஜஸ், ப்ரம்மவர்ச்சஸ் இவைகளுடன் கூடியவராகப் ப்ரகாசிக்கிறீரோ அவ்விதமே என்னை மனிதர் நடுவில் ப்ரகாசிக்கச் செய்யவும்.

யாகங்களின் பலனாக அடையக் கூடிய நீண்ட ஆயுள், தேஜஸ், ப்ரம்மவர்ச்சஸ் முதலிய குணங்கள் அத்வர்யுவையும் யஜமானனையும் அடையட்டும் என்று ஆசீர்வசனமாக ஆகிறது.

अनुवाकः—६ शिरोवा एतद्यज्ञस्य ।

ப்ரவர்க்யம், யக்ஞத்தின் சிரஸ்ஸாகவும், உபஸத் யாகத்தின் கழுத்து உருவமாகவும் இருப்பதால் ஒன்றுக்கொன்று சமீபத்தில் இருக்கின்றன.

உபஸத் அநுஷ்டானத்திற்கு முன்பே ப்ரவர்க்யம் அனுஷ்டிக்கப்பட வேண்டும். சூடான நெய்யில் பாலே விடுவது ப்ரவ்ருஞ்சனம் எனப்படுகிறது. எந்த கர்மாவில் ப்ரவ்ருஞ்சனம் செய்யப்படு கிறதோ அது ப்ரவர்க்யம் எனப்படுகிறது. எந்த கர்மாவில் ப்ரவாக்யம் செய்யப்படுகிறதோ அங்கு ப்ரவ்ருஞ்சனமும் செய்ய வேண்டும். உபஸத் மூன்று நாட்கள் அனுஷ்டிக்கப்பட வேண்டியதால் ப்ரவர்க்யமும் மூன்று தினங்கள் அனுஷ்டிக்கப்பட வேண்டியது. ஆகையால் மூவ் வுலகிற்கும் பொருத்தமானதாக ஆகிறது. ஒவ்வொரு நாளும் காலே, மாலே இரு வேளேயும் ப்ரவர்க்யம் அனுஷ்டிக்கப்படுவதால் ஆறு முறை ஆகிறது. ருதுக்களின் ஸமீபத்தில் ப்ரவர்க்யம் ஏற்பட்டதாக ஆகிறது.

பன்னிரெண்டு நாட்கள் ப்ரவர்க்யம் அனுஷ் டிப்பது பனிரெ்ண்டு நாட்களிலும் இருவேளே. இருவேளே அநுஷ்டிப்பதால் இருபத்து நான்கு முறை ப்ரவர்க்யாநுஷ்டானம் ஏற்படுகிறது. ஒரு வருஷத்திற்கு இருபத்து நான்கு அர்த்த மாஸங் களால் (பக்ஷங்களால்) யாகத்தின் சிரஸ் ஏற்படு கிறது.

ஸோமயாகத்தில் மூன்று நாட்கள், அக்நி சய னத்தில் ஆறு நாட்கள், அஹீனம் எனும் யாக விசேஷத்தில் பன்னிரெண்டு நாட்கள், என ப்ரவர்க்ய அநுஷ்டானம் ஏற்படுகிறது.

வேறு ஒருமுறையும் கூறப்படுகிறது. ஸாத்யா ஹ்ஸ்ஸில் ப்ரவ்ருஞ்சன கர்மாவை சிலர் செய் கின்றனர்.

(மீமாம்ஸா) அருணோதயத்தில் ப்ரவ்ருஞ்சனம் செய்து பின் உதயத்திற்கு முன், உதயமான பின் அல்லது காலை, ஸங்கவகாலம், மத்யான்னம், பவமானேஷ்டி செய்யும்போதும், ஆக்நீத்ரருடைய இடத்தில் ப்ரவ்ருஞ்சனம் ஒரே முறை செய்வதும் அறியப்படுகிறது.

எங்கு ஸோமயாகங்கள் உண்டோ அவை எல்லாவற்றிலும் (அக்நிஷ்டோமம் எல்லா யாகங்களுக்கும் உள்ளடங்கியது ப்ரவர்க்யம் அநுஷ்டிக்கப்பட்டால் யக்ஞம் முழுவதிலுமாக ப்ர வர்க்யம் ஏற்படுத்தப்படுகிறது. இதுவரை அநுஷ் டிக்கப்படாமல் முதலில் அநுஷ்டிக்கப்படும் ப்ர வர்க்யத்துக்கு, உபஸத்துக்கு முன்பே புரஸ்தாதுபஸதா என்ற வாக்யத்தினுல் ப்ரக்ருதியான அக்நிஷ்டோ மத்தின் ஸம்பந்தம் ஏற்படுகிறது. அப்படி இருப்பினும் வேறு சாகையில் 'முதன் முதல் செய்யும் யாகத்தில் ப்ரவ்ருஞ்சனம் செய்யாதே' என்ற நிஷேத வாக்யத்தைத் தள்ளிவிட்டு, நிஷேதத்திற்கு நிஷேதமாக (மறுபடி) செய்யச் சொல்லப்படுகிறது. அதிராத்ரத்தில் ப்ரவ்ருஞ் சனம் செய்யப்பட்டதாகவே ஆகிறது. அதிலும் செய்தாலும் செய்யாவிட்டாலும் ஒன்றேதான்.

அநேக சஸ்த்ரங்கள் உக்த்ய சப்தத்தினால் விதிக்கப்படுகின்றன. அந்த சஸ்திரங்கள் உள்ளன என்பதால் உக்த்யம் என்ற யாகமும், உள்ளது அதில் ப்ரவ்ருஞ்சனம் செய்வதால் ப்ரஜைகள் பசுக்கள் தஹிக்கப்படுகின்றன. அதனால் உக்த்யத்தில் ப்ரவ்ருஞ்சனம் கூடாது.

உக்த்யத்தில் நிஷேதத்திற்கு (प्रतिप्रसवं) விதிவிலக்கு சொல்லப்படுகிறது. ரதந்தரம், ப்ருஹத், வைருப, வைராஜ, சாக்வர, ரைவத ஸாமங்கள் எல்லாம் எந்த விஸ்வஜித் எனும் யாகத்தில் உள்ளனவோ அது ஸர்வப்ருஷ்டம் எனும் யாக விசேஷமாக ஆகிறது. ஆனாலும் விச்வஜித்துக்தீயம் என்பது பிரஸித்தமாக இல்லை. அப்படியானாலும் வேறு சாகையில் இருக்கிறது என்பதால் உக்த்யத்தில் ப்ரவ்ருஞ்சனம் செய்யாதே என்ற நிஷேத வாக்யத்தை நிவர்த்திப்பதற்காக மறுபடியும் சொல்லப்படுகிறது. எல்லா இடங்களிலும் ப்ருஷ்ட ஸ்தோத்ரங்கள் தோஷத்தைப் போக்கு கின்றன. இங்கும் ப்ருஷ்ட ஸ்தோதரம் தோஷம் அதிகமாக இருந்தாலும் தோஷத்தை போக்கி ப்ரவர்க்யத்தின் பலனை அடைகிறான்.

ப்ரவர்க்யத்திற்கு வஸந்தருது முதலான எல்லா ருதுக்களின் ஸம்பந்தம் இருப்பதால் யஜமானனுக்கு எல்லா ருதுக்களிலும் கிடைக்கக் கூடிய போக்யங்களை அளிக்கிறது. மிகுந்த தவத்தினால் அடையக் கூடிய வாக் தேவதை

யக்ஞத்திற்கு உகந்தவள். ப்ரவர்க்யத்திறால் வாக் தேவதையின் ஸாந்நித்யத்தை யஜமானன் அடைகிறான். எவர்கள் ச்ருதி ஸ்ம்ருதிகளில் நிபுணர்களோ, அவர்களின் நிபுணத் தன்மைக்கு காரணமான புத்திருபமான மகாவீரம், ப்ரவர்க்யத்தைச் செய்வதால் மிகுந்த புத்தி கூர்மையை அளிக்கிறது.

யஜமானனுக்கு சரீர ஸௌக்யம், ஐச்வர்யம், பசுக்களின் ஸம்ருத்தி, அன்னஸம்ருத்தி, தேஜஸ், யசஸ், தீர்க்காயுள் இவைகளைப் ப்ரார்த்தித்து விட்டு தோஷங்களின் சமனத்தையும் யக்ஞ காரியங்களில் உத்ஸாஹத்தையும் யக்ஞ பலன்களையும் ஒன்பது மந்திரங்கள் ப்ரார்த்திக்கின்றன. இவை அவகாச மந்திரங்கள் எனப்படும். த்வஷ்டிமதி என்பது பத்தாவது மந்திரம். மனிதனுடைய சரீரத்தில் ஒன்பது த்வாரங்கள் இருக்கிறது. நாபியானது பத்தாவது ப்ராணாயதனமாக (ப்ராணனின் ஸ்தானம்) இருக்கின்றது. அவ்விதமே பத்து மந்திரங்களும் உள்ளன ஆக்நீத்ரரால் சொல்லி வைக்கப்பட்டு பத்தாவது மந்திரத்தை பத்நீ சொல்கிறார். என் கணவரின் ஸம்பந்தம் எனக்கு ஏற்பட்டு, சிசுவுக்கு உருவம் கொடுப்பதால் நீர் த்வஷ்டா எனும் தேவனாக ஆகிறீர். என்னை என் கணவருடன் சேர்ப்பித்து நல்ல குழந்தைகளை உற்பத்தி செய்து, வீர்யமுள்ளவனும், யக்ஞாதி கார்யங்களில் சமர்த்தனுமான குமாரனை அடை

வேணுக என்று ப்ரார்த்திக்கிருள். இங்கு விவாஹத்தின் முக்யத்வமும், ஒவ்வொரு ப்ராம்மணனும் பக்தியுடன் கூடி பாகயக்ஞங்கள் போன்றவைகளையும், ஹவிர்பாகம், ஸோமயாகங்கள் போன்ற ஸோம ஸம்ஸ்தைகளையும் அவர்களும், அவர்களின் ப்ரஜைகள் மற்றும் ஸந்ததிகள் அனைவரும் யக்ஞங்களை அனுஷ்டிக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது.

(மீமாம்ஸா) ஜ்யோதிஷ்டோம யக்ஞத்தின் ப்ரவர்க்யத்தைக் குறித்து சொல்லப்படுகிறது. முதல் யக்ஞத்தில் ப்ரவ்ருஞ்சனம் கூடாது என்று நிஷேதம். இந்த நிஷேதம் ஜ்யோதிஷ்டோம யக்ஞத்தில் அதன் முதல் அநுஷ்டானத்தில் அல்ல. ஜ்யோதிஷ்டோமமானது யக்ஞங்களுக்குள் முதல் யக்ஞம் என்ற சொல்வது சரியல்ல. உபஸத்துக்கு முன்பு ப்ரவர்க்யம் என்று செய்வதால் யாகத்தில் ப்ரவர்க்யம் விதிக்கப்பட்டிருக்கிறது. விதி வாக்யம், நிஷேத வாக்யம் இரண்டும் ஸமமான பலமுள்ளவையாதனால், தீர்மானிக்க முடியவில்லை. நிஷேத வாக்கியத்தில் முதல் என்ற பதத்திஞல் நிஷேதத்தின் உபயோகம் தீர்மானிக்கப்படுகிறது. முதலாவது, இரண்டாவது என்ற பதங்கள் கர்மாவை மறுபடியும் செய்வதில் முக்யமானவை. அதன் ஸம்பந்தத்தால் காரியங்கள் செய்யப்படுகின்றன. முதல் காண்டத்திற்கு பிறகு இரண்டாவது காண்டம் அத்யயனம்

செய்யப்படுகிறது. முதலில் பிறந்தது, முதல் பையன், இரண்டாவதாக பிறந்தது இரண்டாவது பையன் என்பது போல் ப்ரயோகங்களைச் செய்வதிலும் முதல் செய்கை முக்யமானது. அதை மறுபடியும் செய்வது இரண்டாவது பக்ஷமானது. (இந்த பக்ஷத்தில் யாகத்தில் யக்ஞம் என்ற சொல் முக்யமானது. ப்ரயோகம் இரண்டாவது பக்ஷம் என்றால் அது உண்மை)

ஆகையினால் ஜ்யோதிஷ்டோமத்தின் முதல் ப்ரயோகத்தில் ப்ரவர்க்யம் நிஷேதம். ஏழு சோம ஸம்ஸ்தைகளுடன் கூடிய ஜ்யோதிஷ்டோமத்தில் அக்நிஷ்டோமம் முதல் யாகம். அங்கு இந்த நிஷேதம் பொருந்துகிறது. விதியும் கூறுகிறது. அக்நிஷ்டோமத்தில் ப்ரவ்ருஞ்சனம் செய். அப்படியானால் அதிகாரியின் வித்யாசத்தால் விதி, நிஷேதம் இரண்டின் நிர்ணயம் ஏற்படட்டும். மேலும் "எவர் ஸாங்கமான வேதத்தை அறிந்தவராக இருக்கிறாரோ அவர் ப்ரவ்ருஞ்சனம் செய்யலாம். மற்றவர்களின் ப்ரோயகத்தில் இந்த நிஷேதம்." என்று சொல்லப்படுகிறது.

அनुवाकः—७ देवस्य त्वा सवितुः

மகாவீரத்தில் பால் சேர்ப்பதான ப்ரவ்ருஞ்சனம் என்ற க்ரியை செய்யப்படுகிறது. தேவஸ்யத்வா என்ற மந்திரத்தால் பசு மாட்டின் காலைக் கட்டும் கயிறு எடுக்கப்பட்டு பசுவின் காலை

வைத்து வத்ஸாபகரணம் செய்து (கன்றை மாட்டினின்று பிரித்து) பால் கறக்கப்படுகிறது. பசுவின் கன்றுனது ப்ரவர்க்யத்திற்காக சிறிது பாலை மீதம் வைத்து பால் சாப்பிடு என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. பசுவிடம் பால் கறக்கும்பொழுது, பசுவின் கன்றுக்கு தேவையான பால் சாப்பிட விட்டு, மீதி பாலையே கறக்க வேண்டும். பால் கறந்த பின்பும் கன்றை கட்டாமல் அதன் இஷ்டத்திற்கு பால் குடிக்க விடவேண்டும். கன்றிற்கு தேவையான பாலை குடிக்க விடவில்லையென்றால், கன்றிற்கே உரித்தான பாலைத் திருடிய தோஷம் நம்மைச் சாரும்.

சபம் என்னும் மர கிடுக்கியினுல் மகாவீரம் எடுக்கப்பட்டு உபயமம் என்ற பிடியுடன் கூடிய மரப்பலகை மீது வைக்கப்படுகிறது. இவை மூன்று சந்தஸ்ஸுகளின் ஸாந்நித்யம் உள்ளவை. யக்ஞபுருஷனுடைய சிரசை உடலில் பொருத்தியதற்காக அச்விநி தேவர்களுக்கு ப்ரவர்க்யத்தில் முதலில் ஹவிர்பாகம் கொடுக்கப்படுகிறது. வஷட் என்பது ஹோமத்திற்கான மந்திரம். இதை முன்னுல் சொல்லி ஹோமம் செய்தால் இந்திரன் முதலான ஹவிர்பாகமுள்ள தேவதைகளுக்கு ஹோமம் செய்வதின் ஸாரம் கிடைக்காது. வஷட் என்று சொல்லாவிட்டால் ராக்ஷஸர்களின் தொல்லை ஏற்படும். ஆகையினுல் வஷட் என்பதின் முன்பின் எழுத்துக்களைச் சேர்த்து வட் என்று சொல்லி ஹோமம் செய்யப்படுகிறது. இதனுல்

வஷட் என்பதில் குணம் அடையப்படுகிறது. (உலகில் ஸ்ரீனிவாசன், கோபாலன் என்பதை சீனு கோபு என்றும் புதுச்சேரி, தஞ்சாவூர் என்பதை தஞ்சை, புதுவை என்றும் சுருக்கிக் கூறினால் எப்படி முழுப்பெயரின் ஸ்வரூபத்தை அறிகிறோமோ அவ்விதமே தான் இந்த வட் ஆகும்).

வஷட், வௌஷட், ஸ்வாஹா இவை அனைத்தும் ஹோமத்தைக் குறிக்கும் சொற்கள். யக்ஞத்தில் வஷட், வௌஷட் எனறும் மற்ற ஸ்மார்த்தக் கிரியைகளில் ஸ்வாஹா என்றும் குறிப்பிடப் படுகிறது. ஓரிடத்தில், அவசியத்திற்கு அதிகமாக பலமாகச் சொல்வது வஜ்ர: (சத்ருக்களை அழிக்க உபயோகமானது) உரிய மாத்ரைகளுடன் கூறுவது (धामच्छित्) தாமச்சித். (ராக்ஷஸர்களின் உபத்ரவத்திலிருந்து யாகத்தைக் காப்பாற்று.) உரிய அளவு. மாத்ரைகளுக்குக் குறைவாகச் சொல்வது ரிக்த: (யக்ஞத்தைக் குறையுள்ளதாக ஆக்குகிறது) என்று கூறப்படுகிறது. நமது ஹோமங்களில் ப்ரணவம் (ஓம்) ஸ்வாஹாகாரம் இவற்றை அளவிற்கு அதிகமாகவோ குறைவாகவோ இல்லாமல் சரியான (மாத்திரை) அளவில் உச்சரித்து ஹோமங்கள் முதலியன செய்தாலே எதிர்பார்க்கும் பலன்களை அடையலாம்.

ஸூரியனுடைய கிரணங்களுக்கு ஹோமம் செய்யப்படுகிறது ஸூரியனுடைய கிரணங்கள் ஜலாசயங்களில் இருக்கும் ஜலத்தை தன்

உஷ்ணத்தால் ஆவியாக்கி, மேகமாக்கி, பின்பு மழை பொழியச் செய்வதினால் அவற்றிற்கு ஹோமம் ஆஹவனீயத்தின் மேற்கிலுள்ள கார்ஹபத்யத்தின் வடக்கில் ப்ரவர்க்யம் செய்து, கிழக்கில் இருக்கும் ஆஹவனீயத்தில் ஹோமம் செய்யப்படுகிறது. ஐந்து ஹோம மந்திரங்கள் மூச்சு விடாமல் சொல்லப்படுகின்றன. இதனால் யஜமானனின் பிராணன் (ஆயுள்) நீண்டதாக ஆகிறது. கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்னி, ஆவஸத்யம் ஸப்யம் ஆகிய ஐந்து அக்னியினால் கூடிய யக்ஞத்தினால், யக்ஞத்தின் சிரஸ் சேர்க்கப்பட்டதாக ஆகிறது.

ருத்ரனுடன் ஸோமன், ஆதித்யனுடன் கூடிய வருணன், விச்வேதேவர்களுடன் கூடிய ப்ரஹஸ்பதி, அக்னி, ஸவிதா, அங்கீரஸ் எனும் பித்ருக்களுடன் கூடிய யமன் ஆகிய தேவர்களுக்கு ஹோமம். அநவானம் எனப்படும் மூச்சு விடாமல் சொல்லக் கூடிய முதல் ஐந்து மந்திரங்கள் பின் ஐந்து மந்திரங்கள் என பத்து மந்திரங்கள்.

अनुवाक:—८ विश्वा आशा दक्षिणसत् ।

இம்மந்திரத்தினால் தேவர்களுக்கு ப்ரீதி ஏற்பட்டு, யக்ஞத்தில் ஏற்படும் தோஷங்களிலிருந்து யஜமானன் காப்பாற்றப்படுகிறார். மதுரமான ப்ரவர்க்யம் ஹோமம் செய்யப்பட்டு அச்வினி

தேவர்கள் புஷ்டியடைகின்றனர். இந்த்ரனுக்கும், ஸ்வாஹா எனும் ஹோமார்ஹமான மந்திரம் கூறப்பட்டு ஸ்விஷ்டக்ருத் எனும் அக்னிக்கும் ஹோமம் செய்யப்படுகிறது. ஸ்விஷ்டக்ருத்துக்கு முன்பு இந்த்ரனுக்கு ஹோமம் செய்வதால் முக்ய தேவதைக்குப் பின்பே ஸ்விஷ்டக்ருத் ஹோமம் செய்யப்பட வேண்டும் என்பது கடைபிடிக்கப் படுகிறது.

இங்கு க்ரமம் - ஆச்ராவய என்று முதலில் ஆச்ராவணம் செய்து கர்மஸ்ய யஜ (धर्मस्ययज) என்று ஹோதாவை (ப்ரவர்க்ய அநுஷ்டானத் திற்காக யாஜ்யை எனப்படும் ஹோமத்திற்கான மந்திரத்தைச் சொல்) இவ்விதம் ப்ரைஷம் சொல்லிய பின் அச்விநு என்ற மந்திரத்தால் ஹோமம் செய்யவேண்டும். இது ரக்ஷஸ் உபாதை களை நிவர்த்தித்துப் ப்ரவர்க்ய பலனை ஸ்வாதீன கரணம் செய்ய உதவுகிறது. ப்ரவர்க்யத்தில் நெய்யுடன் சேர்ந்த தயிர் பொங்குவதனால் மழையைப் பொழியச் செய்யும் மேகமாக ஆகிறது யஜமானனுக்கு ப்ரம்மதேஜஸ் ஆகியவற்றை அளிக்கிறது. இங்கு உபயோகமாகும் மந்திரங் கள் யஜமானன், அத்வர்யு இருவரின் க்ஷேமத்திற் காக ஆகிறது.

ஐந்து ஸமித்துகள் ஹோமம் செய்யப்படு கின்றன. தேவர்களுநள் ஹுதபாகர்கள், அஹுத பாகர்கள் என இருவிதம் உண்டு. (हुतादो वा अन्ये

प्रहुतादोऽन्ये) எவர்கள் ஹுதபாகர்களோ அவர்களுக்கு ஆஹுதி-பூஷா, வாக்தேவதை, ப்ராண தேவதை, த்யாவாப்ருதிவி, பித்ருக்கள் கர்மபா: (घर्मपा:) எனப்படுகின்றனர்.

ஸோமயாகம் செய்து பின்பு பித்ரு லோகம் அடைந்த பித்ருக்கள் ஸோமபா: பிதர: எனப்படுகின்றனர். இங்கு ப்ரவர்க்யபானம் செய்வதால் பித்ருக்கள் கர்மபா: எனப்படுகின்றனர்.

ஆருவது ஸமித்து எல்லா லேபங்களிலும் துடைக்கப்பட்டு முக்யமான ருத்ரருக்கு ஹவிர் பாகமாக வடக்கே எறியப்படுகிறது. ருத்ரன் ஸம்பந்தமான மந்திரம் சொல்வதால் அதன் கடுரத் தன்மையை நீக்க கையை அலம்பிக் கொள்ளவும்.

रौद्रराक्षसनैर्ऋते पैतृकमन्त्रेषु भेदन निरसं-नाऽऽत्माभिमर्शनानि च कृत्वाऽप उपस्पृशेत् ।। आपस्तम्ब परिभाषा सूत्रं-द्वितीयखण्डिका सूत्रम्-१

ருத்ரன், ராக்ஷஸன், பித்ருக்கள் இவர்கள் ஸம்பந்தமான மந்திரங்கள் உறுக்குதல், பிளத்தல் வெளியில் எறிதல், கர்மா செய்யும் காலத்தில் தன் உடம்பைத் தொட்டுக்கொள்ளுதல் இக்காலங்களில் ஜலத்தைத் தொட வேண்டும். (யஜமானன் யக்ஞங்களில் தேகத்தில் நமைச்சல் ஏற்பட்டால் மா... கொம்பினுல் சொறிந்து கொள்ள வேண்டும்

என்று ஆபஸ்தம்ப ஸூத்ரம்) கூறுகிறது. ஸமித் எரியும் பொழுது அதைப் பார்க்கக்கூடாது. கண்களைக் கெடுக்கக் கூடியது. ஸாயங்காலத்திலும் காலையிலும் அக்நிக்கு ஒரு ஸமித் ஹோமம் செய்யப்படுகிறது. முதலில் ஜலத்தைத் தொட்டுவிட்டு மந்திரமில்லாமல் முன் உள்ள ஸமித் ஹோமம் செய்யப்படுகிறது. முதல் ப்ரவர்க்யத்தில் காலையில் அக்காலத்துக்குரிய த்ரவ்யத்திஞல் அக்நி ஹோத்ரம் செய்யலாமா என்ருல், ஸாயங்காலம் செய்யக்கூடிய அக்நிர்ஜ்யோதி: என்ற மந்திரத்தால் காலையிலும், காலையில் சொல்லக்கூடிய ஸூர்யோஜ்யோதி: என்ற மந்திரத்தால் ஸாயங்காலத்திலும் ஹோமம் செய்ய வேண்டும். ஹோமம் செய்யாவிடில் அக்நி பசியுடனிருப்பார். ஆகையிஞல் தோஷபரிஹாரமாக பூ:ஸ்வாஹா என்று முதல் ப்ரவர்க்யத்திலும், பின்பு ஸாயமக்நி: என்ற மந்திரத்தால் காலையிலோ மாலையிலோ ஹோமம் செய்து, பின் மறுநாள் காலையிலிருந்து வழக்கப்படி ஸூர்யோஜ்யோதி: என்று க்ரமமாகச் செய்ய வேண்டும்.

அவாந்தர தீக்ஷை

ப்ரவர்க்ய அநுஷ்டானம் செய்பவர்கள் ஒரு வருஷத்திற்கு நியமம் இருக்க வேண்டியதைக் குறிப்பிடப்படுகிறது. மாம்ஸம் சாப்பிடக் கூடாது. (கலிவர்ஜம்) ஸ்திரீ ஸங்கமம் கூடாது. (ப்ரம்மசர்ய வ்ரதம்) மண்ணிஞல் செய்யப்பட்ட

பாத்திரங்களில் சாப்பிடக் கூடாது. (பிங்கானுள்பட யாக யஜமானர் சாப்பிட்டு மிகுந்த தீர்த்தத்தை புத்ரன் முதலியோர் சாப்பிடக் கூடாது. இவைகளினால் யஜமானரின் தேஜஸ் அதிகரிக்கிறது.

ஒரு காலத்தில் தேவர்களும் அஸுரர்களும் யுத்தம் செய்தபோது, தேவர்கள் ஸூர்யனுடைய குமாரனான விப்ராட் என்பவரிடம் வேதத்தை பாதுகாக்குமாறு ஒப்படைத்தனர். அந்த விப்ராட் எனும் தேவன் வேதத்தில் பகலில் மட்டும் சொல்லக் கூடியதான (திவாகீர்த்யானி) மந்திரங்களை முன் குறிப்பிட்ட நியமங்களுடன் ரக்ஷித்து வந்தார். ஆகையினால் பகலில் சொல்லக்கூடியதான மந்திரங்களுள் ஒன்றான ப்ரவர்க்ய மந்திரத்தால் அநுஷ்டானம் செய்பவர் இந்த நியமங்களை அனுஷ்டிக்க வேண்டும்.

अनुवाकः—९ घर्मं याते दिविशुक्

மூன்று சலாகைகள் எரிக்கப்பட்டு, ஒன்று முகத்தின் மட்டத்திலும், இரண்டு நாபி மட்டத்திலும். மூன்றாவதில் முழங்கால் மட்டத்திலும் வைத்துக் கொண்டு ஹோமம் செய்யப்படுகிறது. இந்த மூன்று இடங்களும் மூவ்வுலகிற்கும் ஒப்பானது.

ப்ராம்மணர், க்ஷத்ரியர், வைச்யர் ஆகியவர்களின் க்ஷேமம் (இந்த ஜாதியினரால் உலக மக்கள்

காப்பாற்றப்படுகின்றனர் என்பதால்) ப்ரார்த்திக்கப்படுகிறது. ப்ரவர்க்யத்தை தெற்கு, மேற்கு, வடக்கு திக்குகளில் உத்வாஸனம் செய்தால் ஏமாற்றுதல், கபடம், பெருமை, கொடுமை இவை யக்ஞத்தின் சிரஸ்ஸை (ப்ரவர்க்யத்தை) அழித்து விடும். ஆகையினால் கிழக்கு திக்கில் வைக்கப் படுகிறது. ப்ரவர்க்யத்தில் அத்திமரம் உபயோகப் படுகிறது. அத்திமரம் சக்தியுடன் கூடியது. யஜமானனுக்கு சக்தியைத் தருகிறது. செல்லும் போது ப்ரஸ்தோதா ஸாமகானம் செய்கிறார். ஸாமகானத்தில் ரக்ஷஸை நிவர்த்திக்கும் தன்மையினால் ரக்ஷஸ்பாதை விலகுகிறது. ப்ரஸ்தோதா, பத்நி, ரித்விக்குகள், யஜமானன் இவர்களை நோக்கி சாமகானம் செய்கிறார். இவர்களுக்கு ரக்ஷஸ்பாதை நிவர்த்தியாகிறது. உத்வாஸனம் செய்யுமிடத்தில் ஸ்வர்ணம் வைக்க வேண்டும். இல்லாவிடில் ப்ரவர்க்யத்தின் உஷ்ணம் பூமியில் வைத்தால் பூமியையும், ஜலத்தில் வைத்தால் ஜலத்தையும், பயிர்களினால் ஓஷதிகளையும், மாங்கனியானால் மரங்களையும் பொசுக்கிவிடும். ஆகையினால் பூமி, ஈரமுள்ள இடம், ஜலம், பயிர்கள், மரம் இவைகளில் அக்நியை வைக்கக் கூடாது. ஸ்வர்ணம் அழிவற்றது. அதன்மீது வைக்கலாம். ஆஹவநீயத்தை மூன்று முறை பரிஷேசனமும், மூன்று முறை ப்ரதக்ஷிணமும் அத்வர்யு செய்கிறார்.

உத்ரவேதியானது யக்ஞத்திற்கும், பூமிக்கும் நாபியாக இருக்கிறது. மது கலந்த தயிரினுல் சரீர புஷ்டியையும் வயிறு நிரம்பிய சந்துஷ்டியையும் அடைவதாக மந்திரத்தால் சொல்லப்படுகிறது.

ப்ரவர்க்யத்தை நோக்கி எட்டு மந்திரங்களால் உபஸ்தானம் செய்யப்படுகிறது. ப்ரவர்க்யம் தேவ உருவில் இருப்பதால் எல்லா தேவர்களையும் அழைதது வருகிறது.

अनुवाक:—१० प्रजापतिं वै देवाश्शुक्रं ।

ஒரு ஸமயம் தேவர்கள் ப்ரஜாபதியைக் காமதேனுவாகச் செய்து ப்ரவர்யத்துக்கான பாலைக் கறந்தனர். அவை ஒன்ருகச் சேர்ந்து தேவர்களுக்குகந்ததாகத் தனியாகப் பிரிக்க முடியாமல் ஆயிற்று. அப்பொழுது அக்நியானவர் அதைப் பிரிப்பதற்கு யோக்யமாகச் செய்தார். ஸாமகானத்தில் எவை ரஸமானவை எவை வெளி வந்தனவோ அவை ப்ரவர்க்யத்துக்கு உபயோக மான மந்திரங்களாக ஆயின. சுக்ரியம் எனப்படும் ப்ரவர்க்ய ஸம்பந்தமானவையும் ஸாமாவின் ஸம்பந்தமுள்ளவையுமான இந்த மந்திரங்கள் யஜுஸ் மந்திரங்கள். இவ்விதம் ப்ரவர்க்ய உப யோகமான மந்திரங்களின் உற்பத்தி கூறப் பட்டது.

த்ரவ்யங்கள்:—இங்கு கூறப்படுகின்ற பாலில் இரண்டு விதம் உண்டு. ஒன்று ஸாமவேத தேவ

னைக்கு ப்ரியமான பசும்பால். மற்றென்று தேவர்களுக்குப் ப்ரியமான ஆட்டின் பால். மந்திரம் உண்டாவது போலவே இருவகையான பாலும் உள்ளன. யஜுஸ் மந்திரங்களால் ப்ரவர்க்ய மந்திரங்களால் இருவிதமான பாலுடன் கர்மாவைச் செய்கின்றனர். சுக்ரிய மந்திரங்களால் இரண்டு பாலையும் ஹோமம் செய்யுங்கள் என்று மந்திரம், த்ரவ்ய ஸம்பந்தமான விதிகள் தெரிவிக்கின்றன.

தேஜஸ், அன்னஸம்ருத்தி இவற்றை விரும்புபவர் உத்ரவேதியில் ப்ரவர்க்யோத்வாஸனம் செய்யவும். உத்திரவேதிக்கு அக்னி ஆதாரமுள்ளதாகவும், ப்ரவர்க்ய ஹவிஸ்ஸும் (அக்னி) உருவமுள்ளதாலும் இரண்டிற்கும் தேஜஸைத்தரும் தன்மை உள்ளது. ப்ரவர்க்யம் யக்ஞத்தின் சிரஸ். உத்தர வேதீ முகம். அதனுல் அன்னத்தைச் சாப்பிடுவதற்கு சிரஸ்-முகம் இரண்டும் சேர்ந்ததாக ஆகிறது. அன்ன ஸம்ருத்தி ஏற்படுகிறது. எந்த வருஷத்தில் வேறு ப்ரதேசத்தில் ப்ரவர்க்யம் உத்வாஸனம் செய்யப்பட்டு ப்ரவர்க்யத்தில் பக்ஷிகள வந்து உட்கார்கின்றனவோ, அந்த ஸம்வத்ஸரம் முழுவதும், புத்ரன் இவர்களின் இறந்த சரீரத்தின் பக்ஷிகணங்கள் உட்கார்கின்றன. (ப்ரஜைகள் இறந்து விடுவார்கள் என்று பொருள்) ஆகையினால் தேஜஸ், அன்னஸம்ருத்தி போன்ற காமனைகள் இல்லாதவர்கள் கூட, ப்ரஜைகளைக் காப்பற்றும் பொருட்டு உத்ரவேதியிலேயே உத்வாஸனம்

செய்ய வேண்டும். தண்ணீரிலிருந்து மின்னல் ஸ்வரூபமான ஜ்யோதி உண்டாயிற்று. உத்தர வேதியின் கிழக்கில் (காலையில்) அல்லது மேற்கில் (மாலையில்) உத்வாஸனம் செய்யவேண்டும். ப்ரவர்க்யம் ஜ்யோதி ஸ்வரூபம். ஆகையினால் ப்ரவர்க்யத்தை அதன் ஸ்தானத்திலேயே நீரின் மத்தியில் உத்வாஸனம் செய்கிறார்கள். எஜமானனின் சத்ரு எந்த திக்கில் இருக்கிறானோ அந்த திக்கில் உத்வாஸனம் செய்யவும். வைச்வாநரன் எனும் படியான அக்நி ரூபமாக ப்ரவர்க்யம் இருப்பதால் சத்ரு வைச்வாநராக்னியினால் தகனம் செய்யப்படுகிறான்.

அத்தி மரத்தின் ஒரு கிளையில் உத்வாஸனம் செய்யவும். அத்தி அன்னரஸ ரூபமாக இருப்பதாலும், ப்ராணனுக்கு அன்னம் காரணமாக இருப்பதாலும் ப்ரவர்க்ய பாத்திரத்தின் உஷ்ணத்தால் அதனுடைய உத்வாஸன ஸமயத்தில் 'இதம்' முதலிய மந்திரங்களைக் கூறவும். இன்னாரின் குமாரனை இன்னாரின் ப்ராணனானது என் முன்னால் எப்படி இருக்குமோ அவ்விதம் உஷ்ணத்தினால் தஹிக்கப்பட்டதாகச் செய்கிறேன். சத்ரு நாசமடைகிறான். எவ்விடத்தில் தர்ப்பங்கள் வேர்ப் பாகங்களுடன் உள்ளனவோ, கரையான்களுடன் கூடியவையோ அங்கு மழையை விரும்புபவன் உத்வாஸனம் செய்யவும். இந்த தர்ப்பங்கள், ப்ரவாஹத்துடன் கூடிய நதியில் இருப்பதால்,

'ஆபோவை தர்ப்பா:' என்று வேதத்தில் சொல்லிய படி தர்ப்பைகள் ப்ரவாஹத்துடன் கூடிய நதியின் ரூபம், ஆகையினால் தர்ப்பத்தில் உத்வாஸனம் செய்வதால் ப்ரவர்க்ய ரூபமான ஸூர்யன் தேவ லோகத்திலிருந்து மழையை அனுப்புகிறார். அந்த மழை பாலைவனம், தண்ணீர் இல்லாத மணல் ப்ர தேசங்களிலும் ப்ரவேசிக்கின்றது.

अनुवाकः—११ प्रजापतिस्संभ्रियमाणः ।

மகாவீரமானது செய்யப்படும் பொழுது ப்ர ஜாபதி என்றும், மண் முதலியவை ஒன்று சேர்க் கப்பட்ட பொழுது ஸம்ராட் என்றும், ப்ரவ்ருஞ்ச னம் செய்யப்படும் பொழுது கர்மம், என்றும் (घर्म) உத்வாஸன ஸமயத்தில் மகாவீரம் என்றும் சொல் லப்படுகிறது. ப்ரவர்க்யம் ஆதித்யனே. எவர்கள் மேலோரிடம் தகுந்தபடி மரியாதையுடன் இருக் கிறார்களோ அவர்கள் தனம் முதலிய ப்ரேயா ஜனத்தை அடைகிறார்கள். ஒரு சமயம் காயத்ரி தேவதை தேவர்களிடமிருந்து பிரிந்து சென்றாள். தேவர்கள் ப்ரவர்க்யத்துடன் காயத்ரியை அடைந் தனர். எவர்கள் 24 முறை ப்ரவர்க்யம் செய்கின் றனரோ அவர்கள் புகழையடைகின்றனர். காயத்ரி சந்தஸ் 24 அக்ஷரங்கள் உள்ளது.

அமர்ந்திருக்கும் போது வைச்வதேவர் என் றும், அக்னியில் வைக்கப்படும் போது வஸு என்

றும், நெய் விடப்படும்போது ஸோமன் என் றும், பால் சேரும்பொழுது ஆச்வினம் என்றும், கொதிக்கும் பொழுது மாருதம் என்றும், விளிம்பு வரை வரும்பொழுது பௌஷ்ணன் என்றும், பொங்கி வழியும்போது ஸாரஸ்வதம் என்றும், ஏடு தென்படும்போது மைத்ரன் என்றும், ஆஹவனீ யத்தை நோக்கி வரும்பொழுது வாயு என்றும், ஹோமம் செய்யப்படும் பொழுது ப்ரஜாபதி என் றும் சொல்லப்படுகிறது. இவ்வித பெயர்களை அடைந்த ப்ரவர்க்யம் ஆதித்யன் எனப்படு கிறது.

ப்ரவர்க்ய பாத்திரம் வாக் எனப்படுகிறது. ப்ரஜாபதியானவர் 12 பாகங்களாகப் பிரித்தார். அவகாச மந்திரங்கள் என்பவற்றால் பிராணிகளைச் சிருஷ்டித்தார். தேவர்களையும் அசுரர்களையும் சிருஷ்டித்தார். பின்பு அன்னத்தையும் சிருஷ்டித் தார்.

अनुवाकः—१२ सवितामूत्वा प्रथमेऽहन्

முதல் நாள் ப்ரவ்ருஞ்சனம் செய்பவர் ஸூரிய ஞக ஆகி எல்லா மனோரதங்களையும் அடைகிறார். இரண்டாவது நாள் அக்னியாகி தேவர்களை அடை கிறார். மூன்றாவது நாள் வாயுவாக ஆகி, தீர்க் காயுளையும், நான்காவது நாள் ஆதித்யனாக ஆகி, ப்ரகாசத்தையும், ஐந்தாவது நாள் சந்திரனாக ஆகி நக்ஷத்ர மண்டலத்தையும், ஆறாவது நாள் ருதுக்

களாக ஆகி ஸம்வத்ஸரமாகவும், ஏழாவது நாள் ப்ரம்மாவாக ஆகி சாக்வர சந்தஸ்ஸாகவும், எட்டாவது நாள் ப்ரஹஸ்பதியாக ஆகி காயத்ரீ சந்தஸ்ஸாகவும், ஒன்பதாவது நாள் மித்ரன் எனும் தேவனாகி மூன்று உலகங்களாகவும், பத்தாவது நாள் வருணனாக ஆகி விராஜம் எனும் சந்தஸ்ஸாகவும் பதினொருவது நாள் இந்திரனாக ஆகி த்ருஷ்டுப் சந்தஸ்ஸாகவும், பனிரெண்டாவது நாள் ஸோமனாக ஆகி யக்ஞ பலன்களையும் அடைகிறார். உபஸத்துக்கு முன் செய்யும் ப்ரவர்க்யம் மேல் உலகங்களையும், உபஸத்துக்குப்பின் செய்யும் ப்ரவர்க்யம் கீழ் உலகங்களையும் ப்ரகாசிக்கச் செய்கின்றது. இவற்றை அறிபவர் நன்கு ப்ரகாசிக்கிறார்

இந்த நான்காவது ஐந்தாவது ப்ரச்னங்களை காலையில் நியமங்களுடன் பாராயணம் செய்தால் ஸகல பாபங்களும் நிவர்த்தியாகும். ஐந்தாவது ப்ரச்னத்தால் பஞ்சாதிக்கு ஒரு ப்ரதக்ஷிணமாக 108 அச்வத்த ப்ரதக்ஷிணம் செய்வது மிகவும் ச்லாக்யமானது என்றும் புத்ரப்ரதம் என்றும் பெரியோர்களின் அபிப்ராயம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !!

तैत्तिरीयशाखायां पितृकार्याणि

(मूलं-काण्डानुक्रमणिका)

कारीयं - मारुतमसि मरुतामोज-	என்று ஆரம்பித்து நான்கு அநுவாகம்	तै. संहि.	2	4	7 முதல் 10 வரை
रुद्रः - नमस्ते रुद्र	ப்ரச்னம் முழுவதும்	,,	4	5	
भवावादित्योस्मिन् (திவாகீர்த்ய சப்தம் வரும் அநுவாகம்)	அநுவாகம்	,,	7	3	10
पित्र्यं - सोमाय पितृमते	அநுவாகம்	,,	1	8	5
उशन्तस्त्वा	,,	,,	2	6	12
सुरावन्तं बर्हिषदं	,,	तै. ब्रा	2	6	3
ता वरुण प्रयासैः	,,	,,	1	6	8
इन्द्रो वृत्रं हत्वा	,,	,,	1	3	18
अग्नये देवेभ्यः पितृभ्यः	,,	,,	1	6	9

वैश्वदेवेन व प्रजापतिः	,,	,,	1	6	2	
उशन्तस्त्वा हवामहे	,,	,,	2	6	16	
आनो अग्ने सुकेतुना		,,	2	4	5	
सत्रं सन्ततिर्वा	,,	,,	1	1	3	
एक वि॑ष	,,	,,	1	1	4	
होतृविधिः- प्रजापतिः सोऽन्सवान्-4	,,	,,	2	3	8 முதல் 11 வரை	
सूर्यसूक्तं- सूर्योदेवी		,,	2	8	7	
काठकं	3 ப்ரச்னங்கள்	तै				
आरण्यकं	6 ப்ரச்னங்கள்	तै आ			1 முதல் 6 வரை	
उपनिषदः रुद्रविधिः	4 ப்ரச்னங்கள்	,, ,,			7 முதல் 10 வரை	

அவாந்தரதீக்ஷை—போதாயனர்

(ஸூத்ரப்படி)

(न यानमारोहेन्न वृक्षमधिरोहेन्न कूपमवरोहेन्न छत्रं धारयीत नोपानहौ धारयीत नासन्द्यां शयीत, न स्त्रिया न शूद्रेण सह संभाषेत् यदि संभाषेत ब्राह्मणेन सह संभाषेत न सायं भुञ्जीत यदिसायं भुञ्जीता-पऽवलितं भुञ्जीत, नस्नायात् अष्टम्यां पर्वणि चोपव-सेत् दहश्च स्नायात् वाग्यतस्तिष्ठंस् एतां रात्रि मुपविशेत् संवेशयेद्वा ॥

अमेध्य लोहित शवयाव दर्शने ज्योतिषां दर्शनम् अमेध्यं दृष्ट्वा जपति - अबद्धं मनोदरिद्रं+मा हासीः । इति - अथ यद्येनमभिवर्षति - उन्दतिर्बलं + मातपो-निर्वधिष्ट । इत्येव तत्र जपति ।

संवत्सरमेतत् व्रतंचरेत् संवत्सरं व्रतं नातीत्य एतस्मिन् एव एतत् संवत्सरे अधीयीत ।)

அவாந்தர தீக்ஷை ஸூத்திரத்தின் அர்த்தம்

வாஹனத்தில் ஏறிச் செல்லாதே. மரத்தில் ஏருதே. கிணற்றில் இறங்காதே. குடை பிடித்துக் கொள்ளாதே. பாதரக்ஷைகள் தரிக்காதே. கட்டில்-பெஞ்ச் இவைகளில் படுக்காதே. (தரையிலேயே சயனி) பெண்களிடத்திலும் சூத்திரர்கள் பேசாதே. அப்படி பேசினுல் உடனே ப்ராஹ்மணருடன் சம்பாஷி. ஸாயங்காலத்தில் சாப்பிடாதே. அப்படி சாப்பிட்டால், உஷ்ணமானவற்றை சாப்பிடு, வ்ரதாநுஷ்டான காலத்தில் ஸ்நானம் செய்யாதே அஷ்டமி பர்வ காலங்களில் ஸ்நானம் செய். உபவாசமிரு. வ்ரத நாளில் மௌனமாக இரு. இரவில் உட்கார்ந்திரு. அல்லது சயனித்துக் கொள். மலம், சிவப்பு நிறம், (ரத்தம்) சவம் ஆகியவற்றை பார்த்தால் ஸூரியன், சந்திரன், நக்ஷத்ரங்களைப் பார்.

> அபத்நம் மனேதரித்ரம், சக்ஷுஸ் ஸூர்யோ
> ஜ்யோதிஷாம் ச்ரேஷ்டோ தீக்ஷே மா மாஹாஸீ ||
> உந்ருதீர்பலம் தத்தெள ரோநுத்த பலம் தத்த
> மாமே தீக்ஷா மாதபோ நிர்வதிஷ்ட ||

என்ற மந்திரத்தை ஜபிக்கவும்.

ஒரு வருஷம் இந்த வ்ரதம் அநுஷ்டிக்கவும். வருஷத்திற்கு மேற்படாமல் வ்ரதத்துடன் அவ் வருஷத்தில் (தீக்ஷா) மந்திரங்களை அத்யயனம் செய்யவும்.

ப்ரவர்க்யம்-ப்ரயோக சுருக்கம்

முதலில் மகாவீரம் எனும் பாத்திரம் செய்யப் படவேண்டும். அமாவாஸை அல்லது பூர்ணிமை அன்று அப்ரி (மண் தோண்டும் கருங்காலி மரத் தால் ஆன கடப்பாரை) குதிரை, க்ருஷ்ணாஜினம் (மான் தோல்) கன்றுடன் கூடிய ஆடு இவை களுடன் கிழக்கு திக்கில், மகாவீரம் செய்வதற் கான மண் இருக்குமிடம் சென்று, மண்ணை அப்ரி யினால் தோண்டி எடுத்து, க்ருஷ்ணாஜினத்தில் மண்ணை வைக்க வேண்டும்.

மண்ணை குதிரையினால் முகரச் செய்ய வேண்டும். பின் ஆட்டின் பாலைக் கறந்து, தோண்டிய மண்ணில் கலந்து, யக்ஞ சாலையின் வடபுறம் கொண்டு வந்து, அதில் பன்றியின் மூக்கினால் தோண்டப்பட்ட மண், புற்றின் மண், பூதீகம் எனும் ஓஷதி, ஆட்டின் ரோமம், மான் தோலின் ரோமம் போன்ற மண்ணைக் கெட்டிப் படுத்தும் பொருள்களைக் கலந்து விரல்களால் நன்ருக பிசைய வேண்டும். மண்ணில் உஷ்ண ஜலத்தைக் (மதந்தி) கலந்து, சிறிதளவு மிச்சம் வைத்து மற்ற மண்ணால் மூன்று உருண்டைகள் செய்ய வேண்டும். உருண்டைகள் ஒவ்வொன்றை யும் 3 பாகம் செய்து, ஒரு பாகத்தால் மகாவீரத் தின் சற்று அகலமான அடிபாகம், ஒரு பாகத்

தால் மூன்று மண் வளையங்களுடன் கூடிய நடு பாகம், மற்ற உருண்டையால் மகாவீரத்தின் சற்று அகலமான வாய்ப்புறம் இவற்றை இணைத்து ஒரு சாண் உயரம் உள்ள மகாவீரம் செய்யப்படுகிறது.

இவ்விதம் மற்ற இரண்டு பெரிய மண் உருண்டைகளை மும்மூன்றாகப் பிரித்து முன் போலவே இரண்டு மகாவீரங்கள் தயாரிக்கப்படுகின்றன. மீதமுள்ள மண்ணால் 2 தோஹண பாத்திரங்கள், ஆஜ்யஸ்தாலீ, ரௌக்ஷிண புரோடாசம் தயாரிப்பதற்கான வட்டமான இரு சிறு மண் தட்டுகள் இவைகளைத் தயாரிக்க வேண்டும். கார்ஹபத்யம் இருக்குமிடத்திற்கு கிழக்கு புறம்கரம் (கர் எனும் உஷ்ணமூட்டும் சிறு மண் பள்ளம செய்து தர்ப்பம், முஞ்சம்புல் இவை களினால் செய்யப்பட்ட அக்கியில் மகாவீரம் முதலிய மண் பாத்திரங்களை நன்கு வேக வைக்க வேண்டும்.

நன்கு வேக வைக்கப்பட்ட மகாவீரங்களை, மரக் கிடிக்கியினால் கீழே இறக்கி, ஆட்டின் பாலினால் நன்கு தெளிக்க வேண்டும் மர இடுக்கி, தணலை எடுப்பதற்கான இரு சிறு கட்டைகள் முதலியவை அத்தி மரத்தினாலும், பசுவைக் கட்டு வதற்கும், அதன் கால்களை இணைப்பதற்கும், கன்றுகளைக் கட்டுவதற்கும், தர்ப்பம்-முஞ்சம்புல் ஆகியவற்றால் பல கயிறுகள் தயார் செய்யப்

படுகின்றன. க்ருஷ்ணாஜினத்தினால் இரு விசிறிகள், வட்டவடிவமான தங்கத் தகடு ஒன்று, வெள்ளித் தகடுகள் ஆகியவைகளும் தயார் செய்து கொள்ளப்படுகின்றன.

ப்ரவர்க்யம் ஆரம்பிக்கும் சமயம், ப்ரஹ்மாவினால் அநுமதிக்கப்பட்டு, அத்வர்யு ரௌஹிண புரோடாசம் செய்ய, ஆக்நீத்ரரை கூறிவிட்டு, வேதி இருக்குமிடமான ப்ராக்வம்சம் எனும் இடத்தின் தென்புற வாசலின் வெளியே ப்ரவர்க்ய ஸ்தானத்திலிருந்து பார்வையில் இருக்கும்படியாக பசு, கன்று, ஆடு, ஆட்டின் குட்டி இவைகளுக்காக நான்கு முளைகள் ஊன்றப்படுகின்றன. கார்ஹபத்யத்திற்கு வடபுறம் மேடை அமைத்து, கார்ஹபத்யாக்நியிலிருந்து முஞ்சம்புல்லால் அக்நி உண்டாக்கி, மேடையின் மீது வைத்து, அந்த அக்நியில் மகாவீரத்தை வைத்து, அதில் நெய் ஊற்ற வேண்டும். மகாவீரத்தின் வாய்ப்புறத்தை தங்கத்தகடால் மூடி; மான் தோல் விசிறியினால் விசிறி; மறுபடி மகாவீரத்தை நெய்யினால் நிரப்பி; மறுபடி தங்கத்தகடால் மூடி; அத்வர்யு, ப்ரதிப்ரஸ்தாதா, ஆக்நீத்ரர் இவர்கள் மான்தோல் விசிறியினால் அக்நியை விசிறி; அக்நியை நன்கு பலப்படுத்த வேண்டும். பின் தங்கத்தகடை எடுத்துவிட்டு, விசிறிகளை மகாவீரம் வைக்கும் ஆஸனத்தின் மீது வைக்க வேண்டும்.

ரித்விக்குகள் மகாவீரத்தைப் பார்க்காமல் அமர்ந்திருக்கின்றனர் பின்பு அத்வர்யு கன்றை. அவிழ்த்துவிட்டு பசுவின் பாலைக் கறக்கிறார். ப்ரதிப்ரஸ்தாதா ஆட்டின் பாலைக் கறக்கிறார். இருவரும் அந்த பாலை ஆக்நீத்ரரிடம் கொடுக்கின்றனர். ஆக்நீத்ரர் அந்த பாலை தனித்தனியாக எடுத்துக் கொண்டு ப்ராக்வம்சம் அடைகிறார் அத்வர்யுவானவர் பாலைப் பெற்றுக் கொண்டு ஒவ்வொன்றாக மகாவீரத்தில் ஊற்றுகிறார். முதலில் ஆட்டின் பால், பின் பசுவின் பால் என்று சிலரும், முதலில் பசும்பால் பின்பு ஆட்டின் பால் என்று சிலரும் கூறுகின்றனர். அத்வர்யுவானவர் ''ஸூர்யஸ்ய'' என்ற மந்திரத்தால் மகாவீரத்தைப் பார்க்கிறார். உஷ்ணமான நெய்யில் பசும்பால், ஆட்டின் பால் இவைகளைச் சேர்க்கும் இந்த க்ரியை ப்ரவ்ருஞ்சனம் எனப்படுகிறது.

ஜுஹு எனப்படும் ஹோம பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள புரோடாசம் ப்ரதிப்ரஸ்தாதாவினால் ஆஹவனீயாக்நியில் ஹோமம் செய்யப் படுகின்றது. அதன்பின் மகாவீரத்திலுள்ள நெய் யுடன் கூடிய பாலை ஹோமம் செய்யப்படு கின்றன. மீதமுள்ள பாலைக் கொண்டு ஸ்விஷ்டக்ருத் ஹோமம் செய்யப்பட்டபின், சற்று

உஷ்ணம் செய்யப்பட்ட தயிர், அத்வர்யு வைத்திருக்கும் மகாவீரத்தில், ப்ரதிப்ரஸ்தாதாவினால் நிரப்பப்பட்டு சிறிது ஹோமம் செய்தபின், முன்பு சொல்லப்பட்ட கரம் என்ற இடத்தில் மகாவீரம் வைக்கப்படுகின்றது. பின்பு ப்ரதிப்ரஸ்தாதா புரோடாச ஹோமம் செய்தபின், அத்வர்யு ஸமித்துக்களால், ஆறு ஹோமங்கள் செய்தபின், அக்நிஹோத்ரம் ஆன பின்பு, ஹோதா, ப்ரம்மா, ஆக்நீத்ரர், யஜமானர் முதலியோர் ஹோம சேஷ ப்ராசனம் செய்கின்றனர். பின்பு மகாவீரம் முதலிய ப்ரவர்க்ய ஸாதனங்கள் ஸம்ராடாஸந்தி எனும் மகாவீரம் வைக்கப்படும் ஆஸனத்தில் வைக்கப்படுகின்றன. பின்னர் ரித்விக்குகள் மதந்தி கும்பத்தைத் தொட்டுக் கொண்டு உத்தர சாந்தி ஜபம் செய்ய வேண்டும்.

ப்ரவர்க்ய ஸ்தலம்

கரம் :— மகாவீரத்தை ஸந்தாபம் செய்வதற்கும் ப்ரக்ஷாவணத்திற்கும் மணலால் செய்யப் பட்ட இடம் கார்ஹபத்யாக்நிக்கு வடபுறம் ஒரு கரமும், ஆஹவநீயாக்நிக்கு வடபுறம் ஒரு கரமும் உள்ளது. ப்ராசீன வம்சத்தின் வடபுறம் வாசலுக்கு சமீபத்தில் உட்புறம் உச்சிஷ்டகா ஸ்தாபனம்.

ரித்விக்குகள் :— கார்ஹபத்யத்தின் வடபுறம் உள்ள கரத்தைச் சுற்றிலும் மேற்கு புறம் ஹோதாவும், தெற்கு பக்கத்தில் கிழக்கு புறத்திலிருந்து வரிசையாக, ப்ரம்மா, யஜமானன், ப்ரஸ்தோதாவும், வடபுறத்தில் கிழக்கிலிருந்து ப்ரதிப்ரஸ்தோதாவும், ஆக்நீத்ரரும் ப்ரவர்க்ய ஸமயத்தில் உட்காருகிறுர்கள்.

மேதி :— ப்ராசீன வம்சத்தின் தெற்கு வாயிற்படியின் தெற்கில் மேதி முளை அடிக்கப்படுகிறது. அதற்கு சற்று கிழக்கில் பசுங்கன்றுக்கான முளை அடிக்கப்படுகிறது. தெற்கு வாயிற்படியின் தெற்கில் மேல்புறம் ஆட்டிற்கான முளை அடிக்கப் படுகிறது.

ப்ராசீன வம்சம் என்பது; கார்ஹபத் யாக்னி, ஆஹவநீயம், தக்ஷிணாக்னி, வேதி கரங்கள் ஆகியவைகள் அடங்கிய நான்கு புறமும் வாயிற்படி உள்ள ஸ்தலம். இதில் ஸம்ராடா ஸந்தி, ராஜா ஸந்தி, பத்நீ சாலா ஆகியவையும் அடங்கும்.

மகாவேதி என்பது ஒரு ஸ்தலம். அதில் ஸத:, ஹவிர்த்தானம், உத்தரவேதி, நாபி, பத்நீ சாலா ஆகியவை அடங்கியது. யாகம் செய் வதற்கு உபயோகமான ஸ்தலம்.

யூபாவடம் என்று ஒரு இடம் அதில்தான் யூபத்தை நடுவார்கள். அந்த இடம்; யாக சாலா வின் கிழக்குப்புறம், வேதிக்கு உள் ½ பாகமும், வேதிக்கு வெளியில் ½ பாகமுமாக உள்ளது.

உத்கரம் என்பது ஒரு இடம். இது அவசிய மில்லாத அல்லது உபயோகித்த தர்ப்பை முதலிய வற்றை போடுகின்ற இடம்.


வடக்கு
யாகசாலா
ப்ரவர்க்கிய ஸ்தலம்
கரம்
ப்ரதிப்ரஸ்தோதா
ஆக்னீத்ர
ஹோதா
பிரம்மா
யஜமான:
ப்ரஸ்தோதா.
உச்சிஷ்ட கரம்
கரம்
ப்ராசீனவம்சம்
வேதி:
கார்ஹபத்யம்
ஆஹவநீயம்
தக்ஷிணாக்னி
ஸம்ராட ஸந்தி
ராஜாஸந்தி
பத்னீசாலா
மேதி, மயூகங்கள்
மஹாவேதி
ஸத:
உத்கரம்
ஹவிர்தானம்
உத்தரஹவிர்தானம்
தக்ஷிணஹவிர்தானம்
பத்னீசாலா
(ஸோமயாக காலத்தில்)
உத்தரவேதி
நாபி
யூபம்
ப்ரம்மஸ்தானம்
யஜமானஸ்தானம்
கிழக்கு
மேற்கு
தெற்கு